Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
(C/638)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 22 செவ்வாய்க்கிழமை (05.04.2011) பக்கங்கள் 12 ஓசை – 188

## முல்லையில் பனை,தென்னை அபிவிருத்திக்கு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நிதியுதவி



(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினதும் அதன் அங்கத்துவ சங்கங்களினதும் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இருபது இலட்சம் ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளார்.

கொழும்பிலுள்ள அமைச்சரின் செயலகத்தில் அமைச்சரை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.இதன்போது யுத்தத்தால் செயலிழந்துள்ள அம்மாவட்டத்தின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினது செயற்பாடுகளை மீண்டும் புதுப்பித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.அதன் பிரகாரம் இறுதி யுத்தத்திற்கு முன்னர் குறிப்பிட்ட சங்கங்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி கிளைகளில் பணம் வைப்பிலிட்ட (11 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை மூடுமந்திரமாகவே இருக்கப்போகிறது

## இலங்கை அரசுக்கு எட்டாக்கனி



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூன் நியமித்த நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை இப்போதைக்கு இரகசியமாகவே வைக்கப்படவுள்ளது. அனேகமாக மேற்படி நிபுணர்குழுவின் அறிக்கை இம்மாதம் நடுப்பகுதியில் அல்லது மாத இறுதியில் ஐ.நா.செயலாளர் பான்கீ மூனிடம் கையளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இந்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்த முன்பு அதன் பிரதி ஒன்றை தம்மிடம் கையளிக்கும்படி இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கவனத்தில் எடுக்கவில்லை எனத் தெரியவருவதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. (11ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை உயர்வு அரசுமீது ஐ.தே.க.பாய்ச்சல்

(கொழும்பு)



எரிபொருள்களின் விலை அதிகரிப்பு விடயத்தில் அரசாங்கம் மக்கள் மீது வரிகளை சுமத்தி பணம் சுருட்டுவதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக இக்கருத்தினை வெளியிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்: (11ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை நாடுகடத்த வேண்டாம் பிரித்தானியாவில் வலுவடையும் கோரிக்கை

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை இலங்கைக்கு நாடுகடத்த வேண்டாமென பிரித்தானிய அரசைக் கோரும் நடவடிக்கைக்கு தான் முழு ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக பிரித்தானியாவின் தொழிற் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்திர சர்மா தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களுடன் நீண்டகாலமாக நெருக்கமான உறவுகளை வைத்திருக்கும் நான் ஈழத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நன்கு அறிவேன். இன்றைய (11ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய பாராளுமன்ற நட்புச் சங்கத்தின் தலைவராக சுசில் பிரேமஜயந்த தெரிவு

(கொழும்பு)

இலங்கை ரஷ்ய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த சங்கத்தின் ஆலோசகர்களாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதமர் டி.எம். ஜயரட்ன மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை ரஷ்ய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக 26 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொதுநலவாய அமைப்பு பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

பொதுநலவாய அமைப்பு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் 2011-2012 கல்வியாண்டிற்கான பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து உயர்கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கென்யா மொரீசியஸ் நைஜீரியா தன்சானியா நாடுகளில் தலா ஒரு புலமைப்பரிசிலும் தென்னாபிரிக்காவில் மூன்று புலமைப்பரிசில்களுக்குமே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் இருபத்தொன்பதாம் (11ஆம் பக்கம் பார்க்க)

## சாந்தபுரம் கிராம மக்களுக்கு இலவசக் காணித்துண்டுகள்

### பாராளுமன்ற உறுப்பினர் ஏற்பாடு

(கிளிநொச்சி)

மீள்குடியேறி இன்றுவரை தங்களது உறவினர்கள் நண்பர்களது வீடுகளில் வசித்து வந்த சாந்தபுரம் கிராம மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களின் நடவடிக்கையின் நிமித்தம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கரைச்சிப் பிரதேச காணி அலுவலர் சிவகுமார் கிராம அலுவலர் திருமதி (12ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கை மண்ணில் இந்திய இராணுவம்

### புத்தக வெளியீட்டால் பரபரப்பு

கடந்த 1987ஆம் ஆண்டு முதல 1989ஆம் ஆண்டு வரை இந்திய இராணுவம் தமிழர் பகுதிகளில் செய்த இராணுவ நடவடிக்கைகளை படமாக்கி ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த புத்தக வெளியீட்டு விழாவில் பல ஆர்வலர்கள் கலந்து கொண்டு உரை (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதியில் வரும் உணவுக்குத் தடை மிக விரைவில் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)



மனித சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துதல், உணவுகளின் தன்மை பாதிப்பு, தரத்தில் மாறுதல்கள் ஏற்படுதல் என்பன காரணமாக பொதியிடப்பட்ட உணவுப்பொருட்கள் பயன்பாடு தடை செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் ஜுலை முதலாம் திகதியுடன் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிக கட்டணம் அறவிடும் பஸ்களின் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் இரத்து

(கொழும்பு)

பயணிகளிடம் அதிக கட்டணத்தை அறவிடும் பஸ்களின் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் விசேட நடமாடும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பண்டிகை காலத்தின் போது தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகளிடம் சில பஸ்களில் அதிக கட்டணம் அறவிடப்படுவதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறியுள்ளது.

இதேவேளை, தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை குறித்த போக்குவரத்து சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் ஏப்ரல் 9 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதிவரை விசேட ரயில் சேவைகளையும் ஆரம்பிக்கவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நாளாந்த ரயில் சேவையுடன் சேர்த்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து வவுனியா, கண்டி, மாத்தறை உள்ளிட்ட பகுதிகளுக்கு மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

# சுன்னாகத்தில் விபத்து; வயோதிபர் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், மயிலணிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் கயாமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் நேருக்குநேர் மோதுண்டமையாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சைக்கிளில் பயணம் செய்த சுன்னாகத்தைச் சேர்ந்த அ.சுந்தரலிங்கம் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் தப்பிடேயாடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

# உத்தரப் பிரதேச முதலமைச்சர் ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு

(கொழும்பு)

உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியைப் பார்ப்பதற்கு இந்தியாவிற்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உத்தரப் பிரதேச முதலமைச்சர் என்.கிரன்குமார் ரெட்டியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சந்திப்பின் போது ஜனாதிபதிக்கு உத்தரப்பிரதேச முதலமைச்சர் நினைவுப் பரிசு ஒன் றையும் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பில் வயோதிபரின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலக்காட்டுவெட்டை காட்டுப் பகுதியிலிருந்து முஸ்லிம் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் மாஞ்சோலை கிராமத்தைச் சேர்ந்த மு.சரிபுத்தம்பி என்ற 68 வயது முதியவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 5 பிள்ளைகளின் தந்தை எனவும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மீன்பிடித் தொழிலுக்கச் சென்று இவர் சில நாட்களாக வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஹட்டன் தாக்குதல் சம்பவம்; 13 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஹட்டன் சமனலகம, ஹிஜிராபுர ஆகிய கிராமப் பகுதிகளில் தமிழர்களின் வீடுகள் தாக்கப்பட்டமை மற்றும் இரண்டு நபர்களைக் காயப்படுத்தியமை தொடர்பில் 13 பேர் அட்டன் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் 5 பேர் தலைமறைவாகியுள்ளதாகவும் அட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி இரவு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி முடிவடைந்ததைத் தொடர்ந்து இனந்தெரியாத குழுவொன்று பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்துள்ளதோடு தமிழர்களின் வீடுகளையும் தாக்கிச் சேதத்துக்குள்ளாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டமையைத் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அத்துடன் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் தலைமையில் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக பல்வேறு சந்திப்புகளும் இடம்பெற்றன.

ஹட்டன் நகரப்பகுதியில் அமைதியை நிலைநாட்டும் வகையில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றவர்களில் நால்வரை கடந்த 3 ஆம் திகதி ஹட்டன் பொலிஸார் கைது செய்து ஹட்டன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து அவர்களை எதிர் வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## மீனவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் கடந்த வருடம் பிடித்துச் செல்லப்பட்ட 6 மீனவர்களில் எஞ்சிய இரண்டு மீனவர்கள் நாடுதிரும்பியுள்ளனர்.

இவர்கள் நேற்று கொழும்பில் உள்ள கடற்தொழில் சார்ந்த முக்கியஸ்தர்களை சந்தித்ததாக மீன்பிடித்துறை அமைச்சர் ஆலோசகர் சபை உறுப்பினர் எஸ்.பி.அந்தோனிமுத்து தெரிவித்துள்ளார்.

## தெய்வீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை அன்புவழிபுரம் ஸ்ரீசரவணபவ பாலமுருகன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் நாளை காலை 11 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' எனும் பொருளில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

## கலையரங்கு அமைக்க 10 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபைக்கு சொந்தமாக கலை அரங்கொன்றை நிர்மாணிப்பதற்கு கல்வியமைச்சு 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

முதற்[illegible]மாக கீழ்த்தளத்தை நிர்மாணிப்பதற்கு தனியார் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகளை யாழ்ப்பாணக் கல்வி வலயப் பணிமனை கோரியுள்ளது.

வட இலங்கை சங்கீத சபைக்கு கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்படவுள்ள அந்த அரங்கினால் நீண்ட காலமாக இருந்து வந்த குறை நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# சிறுத்தீவில் கால்பதிப்பது எப்போது?

(யாழ்ப்பாணம்)

சிறுத்தீவு, லூர்த்து ஹெவி வழிபாடுகள் பல வருடங்களாக நடைபெறாமல் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் அங்கே இன்னமும் கண்ணிகள் அகற்றப்படவில்லை என்பதைக் காரணம் காட்டி பாதுகாப்புப் பிரிவு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தொலைதூரத்தில் இருக்கும் கச்சதீவு, பாலதீவு, கற்கடதீவு போன்றவற்றுக்கு அனுமதிக்கப்படுகிறது.

இதனால் சிறுத்தீவு திருநாள் 15 வருடங்களுக்கு மேலாக நடைபெறவில்லை. குருநகர் கரையோரம் நின்று பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் காணப்படும் தீவில் குடியிருப்புகள் எதுவும் இருக்கவில்லை.

சதுப்பு நிலமாக இருக்கும் தீவை மீனவர்கள் தமது தொழிலகளுக்காகப் பயன்படுத்தி வந்தனர்.

அவர்களும் சுற்றிவரக் கடலில் நடமாட முடிந்தாலும் கரையில் கால்பதிக்க அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (68)

# வன்னியில் மின்வெட்டு

(வவுனியா)

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான மின்சார விநியோகம் இன்று இடைநிறுத்தப்படும் என இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சிப் பிரதேச மின்பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், இந்த மாவட்டங்களில் இன்று காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

33 கிலோவாட் உயர் அழுத்த மின்மார்க்க பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டே இந்த மின்சார விநியோகத் தடை அமுலுக்கு வருகிறது.

இதுதவிர, நாளை முதல் வெள்ளிக்கிழமை வரை வவுனியா - நேரியகுளம் சந்தியில் இருந்து பறையனாலன் குளம் சந்திவரை மின்சார விநியோகம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை தடைபட்டிருக்கும் எனவும், இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி பிரதான பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

# இந்து ஆலயம் அகதிகள் முகாமா?

(கொழும்பு)

களுத்துறையிலுள்ள இந்து ஆலயமொன்றுக்கு பிரித்தானிய உல்லாசப் பிரயாணியொருவரை அழைத்துச் சென்ற உள்ளூர் உல்லாசப் பயண வழிகாட்டியொருவர், அக்கோவிலில் சுனாமி அகதிகள் தங்கவைக்கப்பட்டிருப்பதாக பிரித்தானிய உல்லாச பயணியை நம்பவைத்து அவர்களுக்கு உதவுவதெற்கென பணம் பெற்றமை அம்பலமாகியுள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் களுத்துறை பொலிஸார் சம்பந்தப்பட்ட கோவிலின் குருக்களிடம் வாக்குமூலமொன்றை பெற்றுள்ளனர்.

உல்லாசப் பயணிகளை பயண வழிகாட்டிகள் மதவழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச் சென்று அத்தலங்களுக்கு உதவுவதற்கென பணம் பெற்ற பல சம்பவங்களை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

களுத்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமந்த வெதகே, குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் சுனெத் சாந்த ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி பன்விலை பிரதேச சபை தலைவராக தமிழர் ஒருவர் நியமனம்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்திலுள்ள பன்விலைப் பிரதேசசபைத் தலைவராக பி.எஸ்.அரியநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமன நிகழ்வில் பி.எஸ். அரியநாயகம் கருத்து தெரிவிக்கையில் - இன, மத, மொழி பேதங்களை மறந்து சேவையாறறக் கடமைப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் தூர நோக்கு மலையகப் பகுதிகளில் வெற்றியளித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் அனுஷியா சிவராசா கலந்து கொண்டார்.

# போதைவஸ்து பிரியர்களுக்கு விசேட புனர்வாழ்வுத் திட்டம்

(சாவகச்சேரி)

போதைவஸ்துக்கு அடிமையாகியுள்ள கைதிகளை தேசிய அபாயகரமான போதைவஸ்து கட்டளைச் சட்டத்தின் கண்காணிப்பின்கீழ் இயங்கும் புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகருக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வேண்டுகோளை ஏற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் ஊடாக உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீதிபதிகளின் பயிற்சி மைய தலைவர் நீதியரசர் என்.கே.உடலகவிற்கும் இது தொடர்பாக மேற்படி சபையினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

பரபரப்புத் தேவையில்லை. சுறுசுறுப்பு எப்போதும் உன்னிடம் இருக்கட்டும். தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை.

-விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஒத்துழைப்பு வேண்டும்!

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அந்நாட்டின் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி என்பன முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

விவசாயம் - மண்வளத்தையும், மீன்பிடி - கடல் வளத்தையும், கைத்தொழில் - உள்ளூர் மூலவளங்களையும் கொண்டவையாக அமைந்துள்ளது.

உள்ளூர் மூலவளங்களின் உதவியுடன் கூடிய பாரம்பரியக் கைத்தொழில்களே இங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளன. அழிந்துபோகும் நிலையில் உள்ள இக்கைத்தொழில்களுக்கு புத்துயிர் அளித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

இத்தேவையையும், அதன் அவசியத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமைகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

யுத்த காலத்தின்போது அதற்கு முடிவு கட்டி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று யுத்தத்தின் பின்னர் வியக்கத்தக்க வகையில் யாழ்.மாவட்டம் அபிவிருத்தி அடைந்துள்ளதாக நோர்வேத் தூதுவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனம் திறந்து கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தமிழர் வாழும் பிரதேசங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் அதேநேரம், அந்த மக்களின் அரசியல் உரிமைகளும் தானாகக் கிடைக்க வழியேற்படும் என்பதை சில அரசியற் தலைமைகள் ஏற்றுக்கொள்ள மறுக்கும் அதேநேரம், "உரிமை" "உரிமை" என்று கூக்குரலிட்டு குட்டையைக் கிளறிவிடுவதிலேயே கவனம் செலுத்தி வருகின்றன.

புலிகளின் கை ஓங்கியிருந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி ஒரே கொள்கையின் வழி நின்று செயற்பட்டு வந்த தலைமைகளுக்கு களங்கம் ஏற்படுத்தியவர்கள், அத்தலைமைகள் அன்று தொட்டு இன்றுவரை எதனைக் கூறி வந்ததோ அதனையே இன்று அரசுடனான பேச்சுக்களுக்குப் பொருளாகக் கொண்டு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இத்தனை அன்று சொந்த மூளையில், சொந்தக் காலில் நின்று இவர்கள் செய்திருப்பார்களேயானால் இன்று இந்த அழிவுநிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்குமா?

நிச்சயம் ஏற்பட்டிருக்கமாட்டாது. இதற்கு மாறாக தமிழர் பிரதேசங்கள் எல்லாம் சகல துறைகளிலும் அபிவிருத்தி கண்டிருக்கும்.

தமிழ்மக்களின் உயர்விலும், தாழ்விலும், வாழ்விலும், சாவிலும் இரண்டறக் கலந்து அவர்களோடு ஒன்றிப்போயிருந்தவர்கள், அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட அதிகாரப் பகிர்வே அரசியற்தீர்வுக்கு வலுச்சேர்க்கும் என்றும்,

அதற்கு ஒரேயொரு வழி பேச்சுவார்த்தைதான் என அடித்துக் கூறியிருப்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒரு விடயம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சின் மூலம் பாரம்பரிய கைத்தொழில்கள் மூலம் சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி இளைஞர்களினதும், யுவதிகளினதும் வேலையில்லாப் பிரச்சினைக்கு முடிவு கட்டி, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சிக்கு அபிவிருத்தியில் நாட்டம் கொண்டவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- ஆசிரியர்.

# இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசிலை இரட்டிப்பாக்கத் திட்டம்

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

புலமைப் பரிசில் மூலம், இந்தியா சென்று கல்வி கற்கும், இலங்கை மாணவர்களின் வசதி கருதி,அதனை மேலும் இரட்டிப்பாக்குவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

கொழும்பு "தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச மாணவர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும தெரிவித்ததாவது,

இலங்கையும்,இந்தியாவும் நண்பர்களல்லர்,மாறாக இருவரும் உறவினர்கள். இந்தியா,அயலிலுள்ள நாடுகளுடன் தனது, கண்டுபிடிப்பு உட்பட பல்வேறு சாதனைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது. அதிலும் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொணட உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க, இலங்கையும் இந்தியாவும் பலநூற்றாண்டு காலமாக பணபாடு, நாகரிகம், கல்வி என்பனவற்றை நெருக்கமாக பரிமாறி வருவதாகவும் தெரிவித்தார்.

# வடமாகாண காணி நிர்வாகத் திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண காணி நிர்வாகத் திணைக்கள உத்தியோகத்தர்களின நலவுரிமைகள் பேணுவதையும், பலப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு மேற்படிச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரியாலை சரஸ்வதி நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற முதலாம் காலாண்டுக்கான கூட்டத்தின்போது மேற்படி சங்கத்திற்கான யாப்பு அங்கீகரிக்கப்பட்டு சங்க உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் போஷகராகத் திணைகளத் தலைவர் பொ.தயானந்தன், தலைவராக கை.மகேஸ்வரன் (உதவி காணி ஆணையாளர்), உப தலைவராக செ.ஸ்ரீரங்கநாதன் (காணி உத்தியோகத்தர்), செயலாளராக பொ.குணஈஸ்வரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்) பொருளாளராக செல்வி பா.தாரணி (குடியேற்ற உத்தியோகத்தர்) மற்றும் ஏனைய செயலவை மாவட்ட உறுப்பினாகளாக பா.இராஜ்கோபி (வெளிக்களபோதனாசிரியர், கிளிநொச்சி மாவட்டம), செ.சிவநாதன் (நிலஅளவை உதவியாளர், முல்லைத்தீவு மாவட்டம்), செல்வி செ.ராஜசெல்வி (நிகழ்ச்சித்திடட உதவியாளர், யாழ்மாவட்டம்), எல்.எஸ். குருஸ (காணி உத்தியோகத்தர், மன்னார் மாவட்டம்), வெ.குகேந்திரன் (காணி உத்தியோகத்தர், வவுனியா மாவட்டம்) ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்பாட்டு உறுப்பினர்களாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக ஒவ்வொரு உறுப்பினரும் .தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வீதி விபத்துகளைத் தடுக்க சுற்று வட்டங்கள் அமைப்பு

(வடமராட்சி)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் புனரமைப்பு செய்யப்பட்ட வீதிகளின் சந்திகள் சிலவற்றில் சுற்று வட்டங்கள் நிறுவப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தியில் ஏற்படும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் வல்லைச்சந்தி, ஆவரங்கால் சந்தி, புத்தூர்ச் சந்தி ஆகிய சந்திகளிலே இவ்வாறு சுற்றுவட்டங்கள் அமைக்கப்பட்டு கறுப்பு மஞ்சள் வர்ணம் தீட்டப்பட்டு வருகிறது.

இதைவிட சில பிரதான வீதிகளில் முக்கிய இடங்களில் பாதசாரிகள் கடவைகளும் வரையப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (100)

# முச்சக்கர வண்டியில் இறைச்சியை கொண்டு வந்தவர்களுக்குத் தண்டம்

(சாவகச்சேரி)

வன்னிப் பகுதியில் இருந்து இரு முச்சக்கர வண்டிகளில் இறைச்சி கொண்டு வந்த 2 நபர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

குறித்த இரு நபர்களையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்திபோது வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த இருநபர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி 46 கிலோ இறைச்சியைக் கொண்டு வந்த நபருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 3 மாதம் சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

மேலும் 37.5 கிலோ இறைச்சியைக் கொண்டு வந்த மற்றையவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 2 மாதகால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்ததுடன் சான்றுப்பொருளான இறைச்சியை பறிமுதல் செய்து அழிக்குமாறும் உத்தரவிட்டார். (11)

# யாழ்ப்பாணம் மண்டைதீவுக்கான போக்குவரத்துச் சேவை சீரானது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கும் யாழ்.நகருக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த பழைய பஸ்ஸிற்குப் பதிலாக புதுபஸ் ஒன்று இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட்டுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்படி பகுதிகளுக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்வண்டி அடிக்கடி பழுதடைந்து வந்தது.

இதன் காரணமாக பயணிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதனால் இப்பகுதி மக்கள் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இறுதியாக வழங்கப்பட்ட புதிய ஐந்து பஸ்களில் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்வண்டி நேற்றுமுன்தினம் முதல் மேற்படி பகுதிகளுக்கு இடையிலான தனது சேவையை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகின்றது.

மேலும் இப்பகுதிகளுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் தனியார் மினிபஸ் ஒன்றும ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மத்.கல்லூரி வீதியோரத்தில் கழிவு நீர் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் தெற்குப் பகுதியிலுள்ள கட்டடத்திலிருந்து வெளிச்செல்லும் கழிவு நீர் வீதி ஓரமாகத் தேங்கி நிற்பதால் அவ்விடம் சதுப்பு நிலமாகக் காணபபடுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் வீதியால் செல்பவர்களும் தேவாலயங்களுக்குச் செல்பவர்களும் பெரும் அவஸ்த்தைக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட நீர் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் இதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பிரதேச மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (கா)

# அடிப்படைக் கட்டுமானப் பணிகளை ஏற்படுத்தி கொடுக்க "செவனத" நிறுவனம் முன்வருகை

## மாநகரசபை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவற்காடு பகுதிகளில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படைக் கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க "செவனத" என்ற உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனம் முன்வந்துள்ளதாக யாழ்.மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதிகளில் மீள்குடியேறிய மக்களின் கழிவகற்றல், வாழ்வாதார நடவடிக்கைகள் போன்ற அடிப்படைக கட்டுமான நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்க இவ் அரசசார்பற்ற நிறுனம் முன்வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.


இவ்விடயம் தொடர்பாக நேற்று யாழ்.மாநகர சபை மண்டபத்தில் அந்த நிறுவனத்தின் திட்ட இணைபபாளர் யூ.ஜி.ஏக்கநாயக்கவிற்கும் யாழ்.மாநகர சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் இம்மக்களின் வாழ்வாதார அடிப்படைக் கட்டுமானங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் சார்பில் யாழ்.மாநகர சபை அதிகாரிகளும், மாநகர சபை உறுப்பினர்களும், ஊழியர்களும் கலந்துகொண்டனர். (பா)

# முன்னாள் புலிஉறுப்பினர்களை சமூகத்துடன் இணைப்பது சவால்கள் நிறைந்த பணியாகும்

## பெண் மனித உரிமைச் செயற்பாட்டாளர் கருத்து



(நமது நிருபர்)

முன்னாள் புலி உறுப்பினர்களை மீளவும் சமூகத்தில் இணைப்பது என்பது பாரிய சவால் நிறைந்த பணியாக இருக்கிறதென பெண் உரிமைச் செயற்பாட்டாளர் சுனிலா அபயசேகரா தெரிவித்துள்ளதாக இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்பட்டுவரும் இவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஆயுதங்களைக் கையில் எடுத்த முன்னாள் பெண் உறுப்பினர்கள் திருமணத்தின் போது குறைந்தளவு முக்கியத்துவம் பெறுபவர்களாகவே சமூகத்தினால் நோக்கப்படுகின்றார்கள். இது போன்றதொரு சூழலில் சமூகத்துடன் ஒன்றிவாழும் விடயத் தில் இவர்கள் அதிக சங்கடமான நிலைமையினை உணர்கின்றார்கள்.

சுமார் மூவாயிரம் பேர் வரையிலான முன்னாள் பெண் உறுப்பினர்கள் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் இருந்த போதிலும், இவர்களில் இன்னமும் எத் தனை பேர் திருமணம் செய்யாமல் இருக்கின்றார்கள் என்ற புள்ளிவிபரம் எதுவுமில்லை. தற்போது புலிகள் இல்லாத சூழ்நிலையில், அந்த அமைப்புடன் இணைந்திருந்தவர்கள் தொடர்பில் தமிழ்மக்கள் தாம் நினைப்பதைச் சுதந்திரமாகக் கூறுகின்றார்கள்.

முன்னாள் ஆண், பெண் உறுப்பினர்களில் ஆண் உறுப்பினர்களைவிட பெண் உறுப்பினர்களே அதிக பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன் சமூகத்தின் வசை பாடலுக்கும் ஆளாகின்றார்கள்.

இது தொடர்பில் முன்னாள் பெண் உறுப்பினர்கள் சிலர் தாம் புலிகளுடன் இணைந்திருந்தமையால், எங்களைக் கூடாதவர்களாகக் கருதி எவரும் வேலைவாய்ப்பு அளிப்பதில்லை என்றும், வெறுக்கின்றார்கள் என்றும் தமது ஆதங்கங்களை



வெளிப்படுத்தியிருக்கும் அதேநேரம், தாம் கடந்தகால சம்பவங்கள் அனைத்தையும் மறந்து புதியவாழ்வை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொலித்தீன் பைகளை எறியவேண்டாம்

## யாழ்.மாநகரசபை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் பொலித்தீன் பைகளை கண்ட இடத்திலும் வீச வேண்டாம் என்று மாநகராட்சி மன்றத்தினர் கேட்டுள்ளனர்.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக பொலித்தீன். பைகள் காற்றில் தூக்கி வீசப்பட்டுக் காணப்படுகின்றன.

இந்தப் பொலித்தீன்களை இதற்கென ஒதுக்கப்படும் கொள்கலன்களில் போடுமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

இந்தப் பொலித்தீன்களை சிலர் வீதிகளில் தூக்கி வீசி விட்டுச் செல்வதால் அவை சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.(வி)

# பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9மணிக்கு சங்கப் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (100)

# குருபூசை தினம்

நல்லை த் நஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 30 ஆவது ஆண்டு நிறைவு தின குருபூசைத்தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் ஆதீனத்திலே நடைபெறவுள்ளது.

குருமூர்த்த ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று தேவாரபாராயணத்துடன் பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தவக்காலத் தியானமும் குணமாக்கல் வழிபாடும்

(கொழும்புத்துறை)

இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த அருட்தந்தை பீற்றர் அமல் ராஜ் மற்றும் அவரது குழுவினரின் வழிநடத்தலின் மாபெரும் தவக்காலத் தியானமும், குணமாக்கல் வழிபாடுகளும் நேற்று ஆரம்பமாகியது. நேற்று பழைய பூங்காவீதியில் உள்ள இறை தியான இல்லத்திலும் பருத்தித்துறை லூர்து கெபியிலும் இவ் வழிபாடுகள் நடைபெற்றது.

இன்று மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் பி.ப 4.30 மணியில் இருந்து 9 மணி வரையும் மறுநாள் புதன்கிழமை யாழ்.மரியாள் பேராலய வளாகத்தில் பி.ப. 4.30 மணியில் இருந்து 9.00 மணிவரையும் குணமாக்கல் வழிபாடுகள் நடைபெறும் என்றும் இறைதியானக் குழுவினர் அறிவித்துள்ளனர் (21)




சர்வதேச றோட்டரிக்கழகத்தின் தலைவர் கிறின்ஜின் ஸ்மித்திற்கு இலங்கை திருச்சபையின் குருமுதல்வர் நேசராஜா நினைவுக் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (52)

# அலங்கார உற்சவம்

(சாவகச்சேரி)

கல்வயல் நுணாவில் கிழக்கு ஐயனார் ஆலய அலங்கார உற்சவமும் மணவாளக்கோல விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 1 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 12 ஆம் நாள் திருக்கல்யாண வைபவமும் இடம்பெற்று உற்சவம் நிறைவு பெறும். (11)


# கொடியேற்றம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை இரதோற்சவமும் மாலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (104)

# தேரடிச் செல்லப்பா சுவாமிகளின் அற்புதம் நிறைந்த வாழ்க்கை



நல்லூர்த் தேரடியைத் தமது வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர்களில் சிறந்ததோர் இடத்தை வகிக்கின்றவர் செல்லப்பா சுவாமிகளே! உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்று வாழ்ந்த சித்தர் பரம்பரையில் தேரடிச் செலலப்பர் மிகப்பெரும் சித்தர் ஆவார்.

எமது உள்ளம் தூய்மையாக இருந்தால் இறைவன் அங்கே வந்து குடியிருப்பான். அவ்வாறு இறைவன் இவரது உள்ளத்திலே கோயில் கொண்டு வீற்றிருந்து அருள் புரிவதனால் சித்தரது முகத்திலே ஒரு தேஜஸ் இருந்தது. இவர் உலக இன்பங்களைத் துறந்து மனித வாழ்க்கையை அறவே வெறுத்து ஒதுக்கிய புனிதம் நிறைந்தவர்.

வெளி உலகோருக்கு ஒரு விசரன் போலக் காட்சியளித்த இவர் பக்தியுள்ளவர்களுக்கு ஒரு மகான் போலவும் ஞானி போலவும் தோற்றமளித்தார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவருக்கும் நல்லூரைச் சேர்ந்த பொன்னம்மா என்பவருக்கும் பிள்ளையாக அவதரித்த இவர், இளவயதிலேயே ஞான நாட்டங்கொண்டு கண்டபடி பிதற்றத் தொடங்கிவிட்டார்.

இவரது நடவடிக்கைகள் மிகவும் விசித்திரமாகக் காணப்பட்டது. நடுநிசி வேளையில் பெரிய சத்தமிட்டுக் கத்துவார். நல்லூர் தேரடியிலே இருந்தவண்ணம் முருகப்பெருமானுடன் உரையாடுவார். இவ்வாறு நடந்தமையால இவர் "விசர்ச் செல்லப்பா" என்று அழைக்கப்பட்டார். தேரடியில் இருக்கும் போது "அடே! தேரடா!! உனக்குள்ளே தேரடா!!" என்று கூறுவார். இதில் எவ்வளவு தத்துவார்த்தமான கருத்துகள் நிறைந்திருந்தது என்பதை அனுபவசாலிகளால் மட்டுமே உய்த்துணர முடியும்.

## இன்று குருபூசை தினம்

ஒரு முறை சிறு குழந்தையொன்று நோயினால் கடும் வருத்தமுற்று அவதிப்பட்டு இந்தச் செல்லப்பா சுவாமிகள் மடியிலே வந்து படுத்துவிட்டது. அதனால் துணுக்குற்ற சுவாமிகள் குழந்தை நெற்றியைத் தடவிப்பார்த்துவிட்டு " நல்ல காய்ச்சல் அடிக்கிறதே பொறு பிள்ளை வாறன்" என்று கூறிவிட்டு அங்கே பக்கத்திலே நின்ற தோடைமரத்திலே ஒரு தோடம்பழத்தைப் பிடுங்கிச் சாறு பிழிந்து குடிக்குமாறு கொடுத்தார். காய்ச்சல் பறந்தோடிவிட்டது. குழந்தை எழுந்து துள்ளி விளையாடியது.

இன்னொருமுறை இந்தச் செல்லப்பா சுவாமிகள் தட்டிலே சாப்பாடு எடுத்து வரும்போது ஒரு சிறிய நாய்க்குட்டி ஒன்று காலை நக்கியவாறு பின்தொடர்ந்தது. அதைக் கண்ணுற்ற செல்லப்பா அந்தச் சாப்பாட்டில் சிறிது நாய்க்குட்டிக்குக் கொடுத்து "நீ இதைச் சாப்பிட்டுட்டுப் போ" என்று கூறி ஆசி நல்கினார்.

அந்தச் சிறிய நாய்க்குட்டி சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டுப் போகும் வேளை வேகமாக வந்த கார் அதனை அடித்து விட்டது. உடனே அது இறந்துவிட்டது.

இப்படிப் பல சம்பவங்கள் இவரது வாழ்க்கையில் உண்டு. 1915 ஆம் ஆண்டு பங்குனி அச்சுவினியில் இறைபதம் அடைந்தார். இந்த மகானுடைய அற்புதச் செய்கைகளை வியந்து போற்றுவதோடு அவரை வணங்கி வாழ்த்தி இன்றைய குருபூசை நாளில் அவர் திருவருளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்போமாக.

சிவநெறிக்கலாநிதி: இராசையா ஸ்ரீதரன்

# மாங்குளம் மகாவித்தியாலயம் மீண்டும் சொந்த இடத்தில்

(வடமராட்சி)

மாங்குளம் மகாவித்தியாலயம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த காலத்தின் போது இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து இவ்வித்தியாலயத்தை கடந்த மாதம் இறுதி வாரத்தில் இராணுவம் கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளதை அடுத்தே மீண்டும் இப்பாடசாலை செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் இப்பகுதியில் மீள் குடியமர்ந்த நிலையில் மாணவர்கள் தங்களுடைய கற்றல் நடவடிக்கைகளை இப்பாடசாலையில் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அப்பகுதியில் இருந்த இராணுவ முகாமும் அகற்றப்பட்டு வீதிப்போக்குவரத்துக்கள் சீரடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

# சட்டவிரோத மணல் அகழ்வு தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(கிளிநொச்சி)


நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கனகராயன் குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு நடவடிக்கை இடம்பெறுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள சிலர், சிலரைத் தம்வசப்படுத்தி இந்த சட்டவிரோத மண் அகழ்வை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான செயலில் ஈடுபடுபவர்களை சில மக்கள் தடுக்க முற்பட்டபோது அவர்கள் அம்மக்களை அச்சுறுத்தியதாகவும் இதன்காரணமாக அப்பகுதி மக்கள் வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் பெரும் இடையூறுகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து இவ்வாறான சட்டவிரோதமான செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (12)

# வடக்கின் துரித அபிவிருத்தி பணிகளுக்கு அதிகாரிகளின் பங்களிப்பு அவசியம்

## ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் பெருமளவு நிதி ஒதுக்கீட்டில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துரித அபிவிருத்திக்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு அவசியமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசு இன்று வடக்கின் அபிவிருத்திக்கு எனப் பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்து, அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றது. எனவே, அதிகாரிகள் இதில் தங்களுடைய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பினைச் செலுத்தி பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை விரைவில் மீளக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இங்கு அரச நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், மக்கள் அமைப்புப் பிரதிநிதிகள், ஒபபந்தக்காரர்கள் என அனைவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது.

சில அதிகாரிகள் காலத்தின் தேவையினைக் கருதி நேரம் காலம் பாராது தங்களுடைய கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே, அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, அவ்வாறு எல்லோரும் தங்களுடைய கடமைகளைச் செய்தால் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி விரைவுபடுத்தப்படும்.

அபிவிருத்தி வேலைகளில் தாமதங்கள், தடங்கல்கள் என எவையும் எமது தவறுகளாலோ அல்லது கவனயீனத்தாலோ ஏற்பட்டு விடாமல் நாம் அனைவரும் அக்கறையோடு எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப சிறிது காலத்திற்குக் கடுமையாக உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து வீதி, மின்சாரம், போக்குவரத்து, கல்வி என ஒவ்வொரு துறைசார்ந்தும் அதன் செயற்பாடுகள், வேலைத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு அவை தொடர்பில் மக்கள் அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துக்கள் கோரப்பட்டுக் குறைகள் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் சமூகமளித்திருந்த உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுத் தீர்வுகளும் காணப்பட்டன.

அந்த வகையில் ஏற்கனவே வீதி விளக்குகள் இருந்த இடங்களில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்பு பிரதேச சபையினர் மின் விளக்குகளைக் கொள்வனவு செய்து, மின்சார சபைக்கு வழங்கி பொருத்துவதற்கும், ஒப்பந்தக்காரர்களால் புனரமைக்கப்படும் குறித்த வீதி, புனரமைப்புத் தொடர்பான சகல தகவல்கள் அதாவது வீதியின் அகலம், நீளம் பயன்படுத்தப்படவுள்ள உள்ளீடுகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிவித்தல்கள் ஒவ்வொரு வீதிகளுக்கும் போடப்படுவதற்கும் பிரதேச சபைகளுக்குப் பணிக்கப்பட்டது.

மேலும் என்றிப் மற்றும் நெல்சிப் திட்டங்களுக்குக் கீழ் பிரதேசத்தில் மேற்கொள்கின்ற அபிவிருத்திகள் வேலைத்திட்டங்கள் குறித்தும் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது. தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால் மக்கள் அமைப்பு பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வாறு ஒவ்வொரு துறைகள் சார்ந்தும் மக்களுக்குச் செய்யக்கூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் அந்தந்த அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இக்கூட்டத்திற்கு உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி, உதவிப் பிரதேச செயலர் திருமதி யசோதா, பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோசனா, இராணுவ அதிகாரி மேஜர் வித்தான, பொலிஸ் அதிகாரி சிந்திக்க பண்டார, ஈ.பி.டி.பியின் வலிகாம பிரதேச இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பியின் வலி.தெற்குப் பிரதேச அமைப்பாளர் அன்பு மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், மக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பழுதான முட்டைகள் விற்பனை நுகர்வோர் விசனம் தெரிவிப்பு

(கொட்டடி)

யாழ்.குடாநாட்டில் அநேகமான வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் கோழி முட்டைகள் பழுதடைந்து காணப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

தென்பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் முட்டைகள் இவ்வாறு பழுதடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அதிக வெப்பத்தினால் முட்டைகள் திடீரெனப் பழுதடைவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு வர்த்தக நிலையங்களில் முட்டைகள் வாங்கி பயன்படுத்தும் சமயம் அவை பழுதடைந்து காணப்படுகின்றன எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (வி)

# யு.எஸ்.எயிட் உதவியுடன் தலைமைத்துவப் பயிற்சிகள்

(கிளிநொச்சி)

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வகுப்புகள் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

வவுனியா தவசிக்குளத்தில் அமைந்துள்ள சேவா லங்கா விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுவரும் இப்பயிற்சி வகுப்புக்கள் 2010 ஆம் ஆண்டு க.பொ.த(சாதாரணதர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கே வழங்கப்பட்டு வருகிறது.

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இப்பயிற்சி வகுப்புக்களில் 23 பாடசாலைகளைச் சேர்ந்த 230 மாணவர்கள் 8 குழுவாகப் பிரிக்கப்பட்டு இப்பயிற்சி வழங்கப்பட்டு வருவதுடன், ஒவ்வொரு குழுவிற்கும் 3 நாட்கள் தங்குமிடப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது 7 குழுக்களுக்கான பயிற்சி முடிவடைந்துள்ளதுடன், 8 ஆவது குழுவுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளதாக பயிற்சி வகுப்புப் பொறுப்பாசிரியரும், வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய வள நிலைய முகாமையாளருமான அ.ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார். (12)

# திராட்சைப்பழ விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் திராட்சைப் பழத்தின் விலை திடீரெனக் குறைந்து காணப்படுகின்றது. முன்னர் கிலோ 500 ரூபாவாக விற்கப்பட்ட திராட்சைப்பழம் தற்போது 350 ரூபாவாகச் சரிந்து காணப்படுகின்றது. இதேசமயம் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட திராட்சைப்பழச் செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்தே விலையில் வீழ்ச்சி கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## ஆதினியின் இன்றைய பலன்

(05.04.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 22

இராகுகாலம் 3.09 – 4.39, சுபநேரம் 10.34 – 12.09

துதியை பி.இ 12.10, அச்சுவினி மு.இ.7.37,

அமிர்தசித்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– உடல் நல விருத்தி, ஆரோக்கிய மிகுதி, செல்வந்த நிலை.

ரிஷபம்:– நண்பர் சேர்க்கை, சுற்றுலா, பணச் செலவு.

மிதுனம் :– பதவி உயர்வு, வழக்கில் வெற்றி, பாராட்டப்படல்.

கடகம்:– சுற்றுத்தவர் சேர்க்கை, மனைவியின் மேல் அன்பு, பெற்றோர் உறவு.

சிம்மம்:– இரக்க மிகுதி, தானதர்மம், தெய்வ சிந்தனை.

கன்னி :– காரிய சித்தி, பெரியோர் மதிப்பு, பணவரவு.

துலாம் :– மகிழ்வான நிலை, பொருள் வரவு, ஆபரணச் சேர்க்கை.

விருச்சிகம்:– மன அமைதி, தெய்வ வழிபாடு, சிரமதான விருப்பு.

தனுசு:– காரிய சித்தி, இனசன உதவி, நண்பர் சேர்க்கை.

மகரம்:– பொருள் இழப்பு, அரச பயம், விபத்து.

கும்பம் :– சோர்வான நிலை, நித்திரையில் விருப்பு, காரிய இழப்பு.

மீனம்:– பகைவரால் தொல்லை, காரியத் தடை, பயணத்தில் பொருள் இழப்பு.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் திருடர்களின் கைவரிசை மீண்டும் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நகரில் பூட்டிய நிலையில் இருந்த மோட்டார் சைக்கிளில் ஒன்றைத் திருடர்கள் மிகவும் தந்திரமாகக் களவாடிச் சென்றுள்ளனர்.

அதனைவிட ஆஸ்பத்திரி வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு தேவையைப் பூர்த்தி செய்யச் செல்லும் சிலரின் சைக்கிள்கள் காணாமல் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருடர்களின் இந்தத் திருட்டுச் சம்பவ அதிகரிப்பால் நகரிற்கு வரும் மக்கள் தமது பிரயாண வாகனங்களைக் கவனமாகப் பாதுகாப்பான தரிப்பிடத்தில் விட்டுச் செல்வதே சிறந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# ஐந்து பிள்ளைகளைச் சேர்த்தால் மட்டுமே தடுப்பூசி ஏற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைப்பிள்ளைகளுக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் தடுப்பூசி போட்டுக் கொள்ள முடியாது. அப் பிள்ளைகளின் தாய்மார் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் இந்த ஊசியை மூன்று வயதுக் குழந்தைகளுக்கு ஏற்றுவதாக இருந்தால், ஐந்து பிள்ளைகள் சேர்ந்தால் மட்டுமே போடப்படுமென வைத்தியசாலைப் பணியாளர்களால் தெரிவிக்கப்படுவதை அடுத்தே, ஐந்து பிள்ளைகள் சேராததால் திரும்பிச் செல்ல நேர்வதாக தாய்மார் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இப்பிள்ளைகளுக்குப் போடப்படும் தடுப்பூசி யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டுமே போடப்படுவதாகவும், தெரிவித்த அவர்கள் அச்சுவேலி, புத்தூர், தீவகம் ஆகிய பகுதிகளிலிருந்து சிரமத்தின் மத்தியில் வந்து, பிள்ளைகளுக்கு ஊசி ஏற்றப்படாமல் திரும்பிச் செல்வதாகவும், இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா? என்றும் கேள்வி எழுப்புகின்றனர். (கா)

# பாதுகாப்பற்ற வீதியோரக் கிணறு அச்சத்துடன் பயணிக்கும் பயணிகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் வீதியோரங்களில் எதுவித பாதுகாப்புமற்ற நிலையில் இக்கிணறு காணப்படுவதால் அவ்வீதியால் செல்வோர் இரவு நேரங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியின் வீதியோரத்தில் மூன்று கிணறுகள் பாதுகாப்பற்று கவனிப்பாரின்றிக் காணப்படுவதால் அவ்வீதி வழியே பயணிக்கும் பயணிகள் கடும் ஆபத்தை எதர்நோக்குவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் கிணறு தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து மக்களின் அச்சத்தைப் போக்கவேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (கா)

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேடபோக்குவரத்து வசதிகள்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் கொழும்பிலிருந்து தமது சொந்த ஊருக்குச் செல்லும் பொதுமக்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை,ரயில் திணைக்களம், மேல்மாகாண போக்குவரத்து சபை ஆகியன இணைந்து இந் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன.

இந்த நடைமுறை நாளை முதல் கடைப்பிடிக்கப்படவுள்ளதாகப் போக்குவரத்து ஆணைக்குழுவின் நடவடிக்கைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களிடம் நிர்ணயிக்கப்பட்டவிலைக்கு அதிகமாக கட்டணங்களை அறவிடும் பேருந்துகளை சுற்றிவள்ளக்க நடமாடும் பரிசோதகர்களையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உத்தரவை மீறி பயணிகளிடமிருந்து உரிய கட்டணத்திற்கு அதிகமாகக் கட்டணம் அறவிடும பேருந்துகளின் வீதிப்போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும் என நடவடிக்கைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு கேட்பதையெல்லாம் வழங்குவதற்கு அரசு தயாராக இல்லை

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க



(கொழும்பு)

***தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டதையெல்லாம், அரசாங்கத்தினால் வழங்க முடியாது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர்.

எனவே இதுவரை போலல்லாமல், இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றியை மதிப்பதன் காரணமாகவே அதனுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.எனவே அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்டதையெல்லாம், வழங்க முடியாது. குறிப்பாக கூட்டமைப்புக் கோருவதைப் போன்று பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க முடியாது.

இலங்கை அரசாங்கம், நாடு முழுவதிலும் உள்ள பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

எனவே பெரும்பான்மை மக்களைத் திருப்திபடுத்தும் வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைவது அவசியம் எனத் தெரிவித்தார்.

அதேவேளை அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியுள்ள மேற்படி கருத்தையே ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் தெரிவித்திருந்தார். அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வட மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் எந்த ஒரு அமைச்சர்களும் வட பகுதிக்குச் செல்ல முடியாமல் போகலாம் எனக் கருத்துக் கூறியிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## இம் மாதம் கடும் வெப்பம்

(கொழும்பு)

இலங்கை இந்த மாதம் முழுவதும் பகல்,இரவு நேரங்களில் வெப்பமான காலநிலையை எதிர்கொள்ள நேரிடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சூரியன் நாளை முதல் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுப்பதே இதற்கான காரணம் என திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு பருவநிலை மாற்றம் எதிர்வரும் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதன் முன்கூட்டிய காலநிலை தற்போது அதிக வெப்பமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை,கடந்த2001ஆம் ஆண்டு முதல்2010ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி வெப்பம் மிகுந்த தசாப்தம் என சர்வதேச காலநிலை ஆய்வு மையத்தை மேற்கோள் காட்டி இலங்கை வளிமண்ட லவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில்,வடக்கு, வடமத்திய, மற்றும் வடமேற்கு மாகாணங்களில் இந்த வருடத்தில் உயர்வெப்பநிலை நிலவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தற்போதுள்ள வெப்ப நிலையை விட 5 முதல் 10 பாகைகளால் இந்த வருடத்தில் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# இலங்கையையும் பாதிக்கும் வகையில் இந்தமாதத்தில் ஆறு பாரிய பூகம்பங்கள்

## பேராதனை புவியியல் நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

உலகில் இந்த மாதத்தில் ஆறு பாரிய பூகம்பங்கள் ஏற்படலாம் என்று இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் நிபுணர்கள் குழு ஒன்று எதிர்வு கூறியுள்ளது.

உலகளாவிய ரீதியில், பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய 5 றிச்டர் அளவுகோலுக்கு மேற்பட்ட இந்த ஆறு பூகம்பங்களில் ஒன்று இந்தோனேசியாவில் ஏற்படலாம் என்றும், அது இலங்கையிலும் பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகள் இருப்பதாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியல் கல்விப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் அத்துல சேனாரத்ன தலைமையிலான புவியியல் நிபுணர்கள் குழுவே இந்த ஆய்வை மேற்கொண்டது.

இதன்போதே ஏப்ரல் 3ஆம் நாளுக்கும் 10ஆம் நாளுக்கும் இடையில் ஜப்பானிலும், ஏப்ரல் 6ஆம் நாளுக்கும் 10ஆம் நாளுக்கும் இடையில் சீனாவிலும், ஏப்ரல் 10ஆம் நாளுக்கும் 15ஆம் நாளுக்கும் இடையில் துருக்கி,ஈரான்,நியுசிலாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளையும் பூகம்பங்கள் தாக்கும் வாய்ப்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் ஜப்பானில் ஏப்ரல் 16ஆம் நாளுக்கும் 20ஆம் நாளுக்கும் இடையில் மீண்டும் பூகம்பம் தாக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தோனேசியாவில் ஏற்படக் கூடிய பாரிய பூகம்பத்தினால் இலங்கையிலும் அதன் பாதிப்பு உணரப்படலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஏற்கனவே 2004ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவுக்கருகே கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் தோன்றிய சுனாமி இலங்கையில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் கடற்பிரதேசப் பகுதியில் இறந்த நிலையில் ஒதுங்கும் மீன்கள்



(கொழும்பு)

புத்தளம் ஆலங்குடா பிரதேசத்தில் திடீரென பெருந்தொகையான மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பெருந்தொகையான மீன்கள் கரை ஒதுங்குவது அப்பிரதேச மக்கள் மத்தியில் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார்க் கடலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள எண்ணெய்வள ஆராய்ச்சியின் காரணமாக இந்த மீன்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்குவதாகச் சிலர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் இந்திய மீனவர்கள் டைனமெற் வெடி வைத்து மீன்களைப் பிடிப்பதாகவும் அதில் உயிரிழந்த மீன்களே கரை ஒதுங்குவதாகவும் ஒரு சாரார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கவில்லை. எனினும் புத்தளம் மாவட்டத்தில் பெருந்தொகையான மீன்கள் கரையொதுங்கிய சம்பவம் இதுவே முதல் தடவையாகும்.

# 15மாதங்களில் 170மில்லியன் ரூபா வட,கிழக்கில் தண்டமாக அறவீடு

(கொழும்பு)

கடந்த 15 மாதங்களில் வடக்கு,கிழக்கு பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து பொலிஸாரால் 170 மில்லியன் ரூப்ா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை பொலிஸ் பேச்சாளர் காமினி சில்வா கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்குத் தகவல் வெளியிடுகையில்,

கடந்த 2010 ஜனவரி 01ம் திகதி தொடக்கம் 2011 மார்ச் 10ஆம் திகதி வரையான காலப பகுதியில் வடக்கு,கிழக்கு பகுதிகளில் சட்டம் ஒழுங்குப் பொலிஸாரால் 170 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

மன்னாரில் உள்ள இலங்கைப் பொலிஸ்நிலையம் தண்டப்பணம் அறவீட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்தக் காவல்நிலையம் 91 மில்லியன் ரூபாவைத் தண்டமாக அறவிட்டுள்ளது.

அடுத்ததாக யாழ்ப்பாணம் காவல் நிலையம் 46 மில்லியன் ரூபாவை தண்டமாக அறிவிட்டுள்ளது.

இதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையம்11 மில்லியன் ரூபாவையும், கிளிநொச்சி பொலிஸ் நிலையம் 8 மில்லியன் ரூபா வையும், காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் 5 மில்லியன் ரூபாவையும், மாங்குளம் பொலிஸ்நிலையம் 4 மில்லியன் ரூபாவையும், முல்லைத்தீவு பொலிஸ்நிலையம் 2 மில்லியன் ரூபாவையும் அறவிட்டுள்ளன.

102,806 போக்குவரத்து விதி மீறல்களின் போதும்,6633 பாலியல்வல்லுறவு வழக்குகளிலும், 2603சுற்றுச்சூழல் விவகாரங்களிலும் குற்றப்பணம் அறவிடப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சி தேர்தல் திருத்தசட்டமூலம் இன்று நாடாளுமன்றம் வருகின்றது



(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபை அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு மேலும் பல நன்மைகள் செய்துகொடுக்கும் வகையிலும் ஏற்கனவே காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்தும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று கூடவுள்ள நாடாளுமன்றத்தில் இந்தத் திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்படும். ஏற்கனவே இந்த விருப்பு வாக்கு முறைமை சீர்ப்படுத்தப்பட்டு, அதற்குப் பதிலாகத் தொகுதி முறைமை கொண்டு வரப்படவுள்ளது. இதன் ஊடாக விருப்பு வாக்குகளினால் ஏற்படுகின்ற மோதல்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தினால் சிறுபான்மை மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என முஸ்லிம் அமைப்புகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட பல அமைப்புகள் கடந்த வருடம் 12மனுக்களை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளன. அந்த வழக்குகள் இருந்த நிலையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்புச்கு உட்பட்டது என உயர் நீதி மன்றம் அறிவித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் நவம்பர் 16 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். பின்னர் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் இந்த வருடம் ஜனவரி மாதம் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அந்த ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் திருத்தச் சட்ட மூலமே மீண்டும் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# உணர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை



(மும்பை)

உலகக் கோப்பையை வென்றபோது உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை என யுவராஜ் சிங் கூறினார்.

இறுதி ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தியபோது, களத்தில் நின்ற யுவராஜ், வெற்றி மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் ஆனந்தக் கண்ணீரில் திளைத்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

வெற்றிபெற்றதும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற கனவு நனவானதால் முதல் முறையாக கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. இந்த உலகக் கிண்ணத்தைச் சச்சினுக்காக வெல்ல வேண்டும் என்று விரும்பினோம். ஏனென்றால் இந்திய கிரிக்கெட்டுக்காக அவர் செய்துள்ளதை வேறு யாரும் செய்ய முடியாது.

குறிப்பிடத்தக்க அளவில் சாதனைகள் புரிந்துள்ள அவர், ஓய்வுபெறுவதற்கு முன்பாக கிண்ணத்தை வென்று அவருக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று கடவுளிடம் வேண்டியிருந்தோம்.

உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது மிகப்பெரிய கனவு. கேரி கிர்ஸ்டன் பயிற்சியாளராக வந்த பிறகு அவரது பயிற்சின் கீழ் சிறிது சிறிதாக முன்னேறிக் கிண்ணத்தை வென்றுள்ளோம். இதன்மூலம் ஒவ்வொரு வீரரின் கனவும் நனவாகியுள்ளது.

உலகக்கிண்ணம் தொடங்கியபோது நான் பேர்மில் இல்லை என்று கூறப்பட்டதில் உண்மையில்லை. முதலில் சிறப்பாகப் பந்துவீசினேன், பின்னர் துடுப்பாட்டம் செய்தேன், அதைத் தொடர்ந்து சிறப்பாகக் காத்திருப்புச் செய்தேன். கடந்த ஆண்டு முதலே இதற்காகக் கடுமையாகப் பயிற்சி மேற்கொண்டேன்

உலகக் கிண்ணத்தை வென்றதும் சச்சின் டெண்டுல்கர் கட்டித் தழுவி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டார். அவர் உணர்ச்சிப் பெருக்கில் என்னிடம் என்ன சொன்னார் என்பது தெரியாது. ஆனால் முதல் முறையாக அவரது கண்களில் கண்ணீரைப் பார்த்தேன்.

உலகக் கிண்ணத்தை நான் குறைந்தது ஆயிரம் முறையாக முத்தம் கொடுத்திருப்பேன். நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு ஆதரவாக ஒருமித்த குழுவாக இருக்கிறோம். அணியை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர உதவிய பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டனுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள ஒரு போதும் மெத்தனமாக இருக்க கூடாது என்றார்.

# முடிவை முன்னர் கணித்த வோர்ன்



(அவுஸ்ரேலியா)

உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி வெற்றபெறுமென அவுஸ ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் தனது "டுவிட்டர்" இணையத் தளத்தில் முன்னரேயே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது இணையத் தளத்தில் தெரிவித்துள்ளதாவது-

இறுதிப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடினால் 17 ஓட்டங்களாலும், இரண்டாவதாக துடுப்பெடுத்தாடினால் 6 விக்கெட்டுக்களாலும் வெற்றிபெறுமெனக் கூறியிருந்தார்.

இதேவேளை, இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி சம நிலையில் முடிவடையுமென வோர்ன் முனனரே கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சுழற்பந்து வீச்சாளர்கள் சரியாக செயற்படவில்லை

(கொழும்பு)

உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் சுழல்பந்து வீச்சாளர்கள் போதிய விக்கெட் எடுக்காததே இலங்கையின் தோல்விக்குக் காரணம் என்று இலங்கை அணியின் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

மும்பையில் நடந்த உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இந்திய அணி இலங்கையை 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்நிலையில் இலங்கை அணியினர் தாயகம் திரும்பினர். அங்கு முரளிதரன் கூறுகையில்,

இலங்கை அணி வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களை எடுத்தது. 274 ஓட்டங்கள் என்பது நல்ல ஓட்டமாகும். ஆரம்பத்தில் மலிங்கா சிறப்பாகப் பந்து வீசி 2 முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஆனால் அதன் பின்னர் இந்திய அணியின் விக்கெட்க்களை வீழ்த்தவில்லை. சுழல்பந்து வீச்சாளர்கள் போதிய விக்கெட்டுக்களை வீழ்த்தாததே தோல்விக்கு முக்கிய காரணம் என்று கூறினார்.

மேலும் அவர் ஆரம்பத்தில் இன்னும் ஒரு சில விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தால் போட்டியின் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கும்.

இலங்கை அணியின் எதிர்காலத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறிய முரளிதரன்



வரும் 2015 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணத்தை இலங்கை அணி வெல்லும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.






உலகக் கிண்ணத்தை வென்றால் தனது முடியைத் திருப்பதி வெங்கடாசல பதிக்குக் காணிக்கை தருவதாக வேண்டிய இந்திய அணித்தலைவர் டோனி, அவ்வாறே தனது முடியைக் காணிக்கை செலுத்திய பின்னர் உலக்கிண்ணத்துடன் காணப்படுகிறார்.

# இறுதி அணித்தேர்வில் குழப்பம்

## கொழும்பு ஊடகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலக்கிண்ண இறுதிப் போட்டிக்காக இலங்கை அணி தெரிவு செய்யப்பட்ட வேளை பெரும் குழப்பம் ஏற்பட்டதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக எவ்வித போட்டிகளிலும் பங்கேற்காத வாஸ், உத்தேச அணியில் இருந்த ரந்திவ் ஆகியோர் திடீரென அழைக்கப்பட்டனர்.

போட்டியின் போது நான்கு வீரர்கள் மாற்றம் செய்யப்பட்டனர். மெண்டிசை நீக்கிவிட்டு கடைசி நேரத்தில் ஏன் ரந்திவைச் சேர்த்தார்கள் என்று தெரியவில்லை.

இந்தியாவுக்கு எதிராக விளையாடிய 11 பேரை யார் தெரிவு செய்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை அணியின் கப்டன் சங்கக்கார கூறுகையில்-

அணியில் மாற்றம் எல்லாம் சரியாகத்தான் நடந்தது. ஆனால் துரதிஷ்டமாக பந்துவீச்சு, களத்தடுப்பு சரியாக அமையில்லை. தவிர, இந்திய அணியின் இரண்டு விக்கெட்டுக்கள் விழுந்ததும் தொடர்ந்து நெருக்கடி கொடுக்காமல் விட்டுவிட்டோம் என்றார்.

# உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி இந்திய அணி மகத்தான சாதனை

## கபில் தேவ் தெரிவிப்பு


(சென்னை)

இந்திய அணி 28 ஆண்டுகளுக்கு பிறகு உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது ஒரு அற்புதமான சாதனை என, கபில்தேவ் கூறியுள்ளார்.

10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த இறுதிப்போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வீழ்த்தி இலங்கையைத் தோற் கடித்து கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்திய அணி 28 ஆண்டுகளுக்கு பிறகு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது குறித்து, 1983 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் கப்டனான கபில்தேவ் கூறுகையில்,

நான் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தேசமும் இந்த நிகழ்வுக்காகத்தான் காத்திருந்தது. இது ஒரு அற்புதமான



சாதனை. இந்த மகத்தான சாதனைக்கு எமது அணி தகுதியானது. இந்திய அணியின் வெற்றியால் ஒட்டுமொத்த தேசமும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. 274 ஓட்டங்கள் என்பது எளிதான இலக்கு அல்ல. ஆனால் மொத்தத்தில் இந்திய வீரர்களின் ஆட்டம் அபாரமாக இருந்தது. சாம்பியன்கள் போன்று ஆடினார்கள். இந்த அணி எதையும் சாதிக்கக் கூடிய ஆற்றல் படைத்தது. டோனியை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய அணி நம்ப முடியாத அளவுக்கு ஆடியது என்றார்.

# உலகக்கிண்ணப் போட்டிக்குப் பின் அணிகளின் தரவரிசை வெளியீடு

(மும்பை)

உலகக் கிண்ணப் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் அணிகளுக்கான தர வரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

இதன்படி கிண்ணத்தை இந்திய அணி வென்றபோதிலும் அது தொடந்தும் இரண்டாவது இடத்திலேயே உள்ளது.

ஐ.சி.சி வெளியிட்ட அணிகளின் தர வரிசை வருமாறு- அவுஸ்ரேலியா (128) முதலிடத்திலும், இந்திய அணி (121) இரண்டாவது இடத்திலும், இலங்கை அணி (118) மூன்றாவது இடத்திலும், தென்னாபிரிக்காக (116) நான்காவது இடத்திலும், பாகிஸ்தான் (103) ஆறாவது இடத்திலும், நியூசிலாந்து (94) ஏழாவது இடத்திலும், மேற்கிந்தியத்தீவுகள் (68) எட்டாவது இத்திலும் உள்ளன.

# இந்தோனேஷியாவில் நில நடுக்கம் சுனாமி எச்சரிக்கையும் விடுப்பு



(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் இன்று கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. இந்தோனேஷியாவில் உள்ள ஜாவாத் தீவின் மத்திய பகுதியில் உள்ள சிலிகாப் மாவட்டத்தில் நேற்று அதிகாலை 3.06 மணியளவில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் அதிர்ந்து குலுங்கின. அப்போது அதிகாலை நேரம் என்பதால் மக்கள் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

பின்னர் சுதாரித்துக்கொண்ட அவர்கள் அலறியடித்தபடி எழுந்து, தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். விடிய விடிய வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். இந்த நிலநடுக்கம் சுமார் 30 வினாடிகள் நீடித்தது. சிலிகாப் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் பாலித் தீவிலுள்ள தென்பாகர் நகரில் நன்றாக உணரப்பட்டது.

மேலும் தலைநகர் ஜகார்த்தா, தெற்கு ஜாவாவில் உள்ள நசிக் மலாயா பகுதிகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்பகுதிகளில் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் குலுங்கின. அங்கும் மக்கள் பீதி அடைந்து வீடுகளை விட்டு வெளியேறினர்.

இதற்கிடையே இந்திய பெருங்கடலில் உள்ள சிலிகாப் நகரில் பூமிக்குள் 10 கி.மீ. ஆழத்தில் 7.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக இந்தோனேஷியா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆனால் மேற்கு ஜாவாவில் உள்ள தாசிக் மலாயாவில் பூமிக்கு அடியில் 24 கி.மீட்டர் ஆழத்தில் 6.7 ரிக்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் சர்வே மையம் அறிவித்துள்ளது.

கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டதால் கடலில் வழக்கத்தைவிட அதிக உயரத்துக்கு அலைகள் எழும்பின. இதனால் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. சிறிதுநேரம் கழித்து எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது. நில்நடுக்கம் காரணமாக சிலிகாப் நகர மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களிலுள்ளனர். மேலும், வெளியேறுவதற்கு வசதியாக வாகனங்களில் பெட்ரோல் தேவைக்காக எரிபொருள் நிலையங்களில் நீண்ட கியூ வரிசையில் காத்திருந்தனர்.

இச்சம்பவத்தால் ஏற்பட்ட சேத மதிப்பு, உயிர்ச்சேதம் குறித்து எந்த விவரமும் வெளியிடப்படவில்லை. ஏற்கனவே இந்தோனேஷியா, பசுபிக் கடல் பிராந்தியத்தில் பூகம்ப வளையத்திற்குள் உள்ளது.

இங்கு எரிமலை சீற்றத்தின் அபாயமும் அடிக்கடி ஏற்படுகிறது. கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தோனேஷியாவின் சுமாத்ராதவில் கடும் பூகம்பமும், அதைத் தொடர்ந்து சுனாமித் தாக்குதலும் ஏற்பட்டது. அதில் சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 5 லட்சம் மக்கள் வீடுகளை இழந்தனர்.




# லிபியாவில் காயமடைந்தவர்களை மீட்டுவரும் துருக்கியக் கப்பல்

லிபிய போராட்டத்தில் காயமடைந்த 250 பேரைத் துருக்கி மனிதநேயக் கப்பல் மிஸ்ரட்டா நகரிலிருந்து போராட்டக்காரர்களின் ஆதிக்கப் பகுதியான பெங்காசிக்கு அழைத்து வநதது.

லிபியாவில் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி முதல் கடாபிக்கு எதிராக புரட்சிப் போராட்டம் வெடித்துள்ளது. இநதப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு லிபிய ராணும் வான் வழித் தாக்குதலை நடத்தியது.

இதில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். அப்பாவி மக்களைக் காப்பாற்றுவதற்கு ஐ.நா பாதுகாப்புச சபை லிபியா வான் எல்லையில் விமானம் பறக்கத் தடை விதித்துள்ளது.

இந்தத் தடையை நிறைவேற்ற கூட்டுப்படைகள் லிபியாவில் முகாமிட்டுள்ளன. இந்த நிலையில் மிஸ்ரட்டா நகரில் காயம் அடைந்த 250 பேரைத் துருக்கி மனிதநேயக் கப்பல் பத்திரமாக அழைத்து வந்தது. அந்தக் கப்பலில் இருந்தவர்கள் போராட்டக்காரர்களின் ஆதிக்கம் உள்ள பெங்காசி நகருக்குக் கொண்டு வரப்பட்டனர்.

கப்பலிலிருந்த டாக்டர்கள் கூறுகையில், பலருக்கு கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். இதற்கிடையே லிபியாவின் கிழக்கு எண்ணெய் நகரமான பிரகாவில் போராட்டக் காரர்களுக்கும், [illegible]டாபி ஆதர வுப்படைகளுக் [illegible] இடையே கடும் மோதல் [illegible] ந்தது. பிரகா நகரில் பதற்ற நிலை நிலவுகிறது.

போராட்டக்காரர்கள் மேற்கத்திய படைகளின் ஆதரவினை எதிர்பார்த்துள்ளனர். லிபியா வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் அதி ஒபிடி கிரீக் பிரதமரிடம் கூறுகையில், போராட்டக் காரர்களுடன் நடைபெறும் தாக்குதலை முடிவுக் கொண்டுவர கடாபி விரும்புகிறார் எனத் தெரிவித்தார். கிரீக் வெளியுறவு அமைச்சர் திமிட்ரிஸ் செய்தியாளர்களிடம் கூறும்போது கடாபி நிர்வாகம் போராட்டத்திற்குத் தீர்வு காண விரும்புகிறது எனத் தெரிவித்தார்.

# 2 ஆவது அணு உலையையும் மூடிவிடுவதற்கு பெரு முயற்சி

(டோக்கியோ)

ஜப்பானின் புகுஷிமா அணு மின் நிலையத்தில் கதிர்வீச்சை வெளியிட்டு வரும் இரண்டாம் உலையில் ஏற்பட்டுள்ள பிளவை, கொங்கிரீட் கலவை கொண்டு மூடும் முயற்சியில் பணியாளர்கள் [illegible] பட்டுள்ளனர். இந்நிலையில், அணுமின் நிலையத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பல மாதங்கள் ஆகும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

புகுஷிமா டாய் இச்சி அணுமின் நிலையத்தின் இரண்டாம் உலையிலிருந்து கதிர்வீச்சு கலந்த நீர், கடலில் கலந்ததாக செய்திகள் வெளியாயின. இரண்டாம் உலையில் நீர் கசியக் காரணமான பிளவைச் சரி செய்வதற்காக, அதில் கொங்கிரீட் கலவையைக் கொட்டி மூடும் முயற்சியில் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இந்நிலையில், மார்ச் 11ம் தேதி முதல் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட, “டெப்கோ” ஊழியர் இருவரின் உடல்கள், கடந்த மார்ச் 30 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டதாக நேற்று “டெப்கோ” நிர்வாகம் அறிவித்துள்ளது.

நிலநடுக்கத்திற்குப் பின், டெப்கோவின் ஊழியர்கள் பலியாகியுள்ளது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில், கதிர்வீச்சு கலந்த நீர் தொடர்ந்து கடலில் கலந்து கொண்டிருப்பதாக ஜப்பான் அணுசக்தி பாதுகாப்பு ஏஜன்சி தெரிவித்துள்ளது. டாய் இச்சி அணுமின் நிலையம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதற்கு இன்னும் பல மாதங்கள் ஆகக் கூடும் என்று ஏஜன்சி செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

# குறள் சொல்லும் கதைகள் -35



## இன்பத்துப் பால்

## மெல்லிடை

“முன்பு நீ இப்படிக் கதைத்தால் நான் மனதுக்குள் இவன் சரியான விசரன் என்று நினைப்பேன். அத்துடன் எனது நண்பர்கள் எல்லோருக்கும் நீ சொன்ன கதையைப் பல தடவைகள் சொல்லி விழுந்து விழுந்து சிரித்திருப்பேன்.

உன்னை நான் நண்பர்களுடன் இருக்கும் போது கண்டால் கண்ணால் சைகை காட்டிச் சிரிப்போம். அல்லது சிலேடை மொழியில் கதைத்துச் சிரிப்போம். இப்பொழுது நான் அர்ச்சகாவின் மீது காதல் கொண்ட பின்புதான் காதலின் மகிமை தெரிகிறது. பிரிவின் துயரம் புரிகிறது. காதலின் இயல்பு புரிகிறது. அர்ச்சகாவைக் கண்ட நாள் முதல் அவள் என்னை விரும்புவாளோ என்ற ஏக்கம் என்னை வாட்டியது. அவளைக் கண்ட பின்பு என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. எந் நெஞ்சில் அவளின் முகம் தோன்றி வருத்திக் கொண்டே இருந்தது” கண்களை மூடினான் நகுலன்.

குளக்கரையில் மலர்ந்திருந்த அனிச்ச மலர்களைப் பார்த்தான் கஜேந்திரன். அப்பூக்களைப் பறித்து முகர்வதன் மூலம் வெளிவரும் மூச்சுக் காற்றுப் பட்டாலே அம்மலர்கள் வாடிச் சோர்ந்து விடும். அவ்வளவு மென்மையான மலர்களைக் கவிஞன் எப்படி உவமிக்கிறான். அதை நினைக்க அவனுக்கு வியப்பாக இருந்தது.

“அர்ச்சகா என்னை விரும்புகிறாள் என்பதை அறிந்த பின்பு மகிழ்ச்சியால் குதூகலித்தான். எனது இதயம் அவளின் வார்த்தைகளை எதிர்பார்த்தது. எந்நேரமும் அவள் அருகில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறது. கவிஞர்கள் சொல்வது போல காதல் கொண்ட உள்ளம் பிரிவின் போது நிம்மதியிழந்து தவிக்கிறது. தயவுசெய்து அர்ச்சகாவை நான் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யடா. ஏனோ தெரியவில்லை அவள் கடந்த மூன்று நாட்களாகக் கோயிலுக்கு வரவில்லை” என்றான் நகுலன்.

துயரத்துடன் கதைத்துக் கொண்டிருக்கும் நகுலனின் முகத்தைப் பார்த்தான் கஜேந்திரன். அது வாடிச் சோர்ந்து களை இழந்திருந்தது. பிரிவுத்துயர் அவனது முகமெங்கும் படர்ந்திருந்தமையால், முகம் கறுத்திருந்தது.

“உனது துயரம் எனக்குப் புரிகிறது. ஆனால் என்னால் வித்தியாவின் வீட்டுக்குச் செல்ல முடியாது. வித்தியாவின் தாய் முன்பென்றால் எதுவும் பேசமாட்டா. இப்பொழுது அர்ச்சகாவின் தாய் நான் அங்கு சென்று வருவதைப் பற்றி அடிக்கடி கூறுவதால், அவர் எனக்கு ஆலோசனைகள் கூறுகிறா. அவர் கூறுவது சரிதான். பெண்களைப் பெற்றவர்கள் அவதானமாகத்தானே இருக்கவேண்டும். அதனால் அவர் இல்லாத நேரங்களில் தான் என்னால் அங்கு செல்ல முடியும். வழக்கமாக வித்தியா வரும் இடங்களுக்கும் வரவில்லை. பொறுத்துக்கொள்” என்றான் கஜேந்திரன்.

நகுலன் சில கணங்கள் பேசாமல் நின்றான். பின்பு: “அனிச்ச மலர்களைப் பற்றித்தான் கவிஞர்கள் அளவுக்கதிகமாகக் கூறியுள்ளனர். பெண்களின் மென்மையான சிற்றிடை அனிச்சம் பூச்சூடிய கூந்தல்லயே தாங்கமாட்டாது என்று கூறுகின்றார்கள்”

நான் ஒரு நாள் அனிச்சம் பூக்களை காம்புடன் பறித்துச் சென்று வித்தியாவுக்குக் கொடுத்தேன். அவள் அவற்றை மாலையாகக் கட்டி தனது கூந்தலில் சூடினாள். மிகவும் அருமையாக இருந்தது. வழக்கமாக நிமிர்ந்து நடக்கும் வித்தியா, அன்று கூந்தல் பாரமாக இருக்கிறது, என்று என்னை ஏசினாள். பெண்களுக்கு இடை உடுக்கைப்போல் இருப்பது தான் அழகு” என்றான் கஜேந்திரன்.

“நீ குளக்கரையில் வந்து இருக்கும் காரணம் இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. குளத்தில் மலர்ந்திருக்கும் செந்தாமரை, வெண்தாமரை, நீலோற்பலம் என்பன அர்ச்சகாவின் கன்னங்களைப் போலவும், கண்களைப் போலவும், முகத்தைப் போலவும் எனக்கும் தோன்றுகின்றன” என்றான் நகுலன்.

“சரி வா போவம் இப்ப இரண்டு மணி வீட்டுக்குச் சென்று குளித்துச் சாப்பிட்டு விட்டு நான்கு மணிக்குக் கடற்கரைக்குப் போவோம் வித்தியா வருவாள். சிலவேளை உனக்குக் கடிதம் கொண்டு வருவாள்” என்றான் கஜேந்திரன். அவனது வார்த்தைகள் நகுலனுக்கு இன்பத்தைத் கொடுத்தது.

**கே.வி.குணசேகரம்**

*அனிச்சம்பூ கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை -குறள் - 1115*

*இவள் தனது மென்மையை அறியாது அனிச்சம் பூக்களைக் காம்புடன் சூடினாள். அதன் பாரம் தாங்காது வருந்தும் அவளின் இடைக்கு இனி நல்ல பறை ஒலிக்காது.*

# இலங்கைத் தமிழர் கௌரவமாக வாழ மத்திய அரசை வலியுறுத்துவோம்

## ஜெயலலிதா தெரிவிப்பு



(தூத்துக்குடி)

இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த நாட்டில் அடிமைகள் போல வாழும் நிலையை மாற்ற மத்திய அரசை வலியுறுத்தி நடவடிக்கை எடுப்பதுடன், தமிழ்நாட்டில் இலங்கை அகதிகள் கௌரவமாக வாழ நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், இலவசத் திட்டங்கள் அனைத்தும் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களுக்கும் நீடிக்கப்படுமென, அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்தார்.

பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழகம் வளர்ச்சியில் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. தமிழக மக்கள் பாடுபட்டு உழைக்கவில்லையா, சேமித்து வைக்கவில்லையா, சிக்கன வாழ்வை நடத்தவில்லையா, ஏன் தமிழகம் பின்னுக்குச் சென்றது? இதற்கெல்லாம் கருணாநிதி தான் காரணம்.

அ.தி.மு.க ஆட்சி அமைந்தால் கச்சதீவை மீட்டெடுத்து தமிழக மீனவர் நலன் காக்க நடவடிக்கை எடுக்கப்படும். இயந்திரப் படகுகள் வாங்க மானியம் வழங்கப்படும். 13 இடங்களில் மீன் பதப்படுத்தும் பூங்காக்கள் அமைக்கப்படும். மீன்பிடிக்க விலக்கு அளிக்கப்பட்டுள்ள 45 நாள் தடைக் காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு ரூபா 2000 உதவித்தொகை வழங்கப்படும். பருவகாலத்தில் 4 மாதங்களுக்கு மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள இயலாத சூழ் நிலையில் மீனவக் குடும்பங்களுக்கு ரூபா. 4000 உதவித்தொகை வழங்கப்படும்.

அ.தி.மு.க. வெற்றி பெற்றால் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள திட்டங்களை செயற்படுத்துவோம். எனவே, இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. மற்றும் கூட்டணிக்கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்.

நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல்தான் தமிழகத்தைக் காப்பாற்றுவதற்கு மக்களுக்கு உள்ள கடைசி வாய்ப்பு.

தி.மு.க அரசைத் தூக்கி எறிவதற்கு இந்தத் தேர்தல் பொன்னான வாய்ப்பு. இதைத் தவறவிட்டால் மாநிலத்தை ஒரு போதும் காப்பாற்ற முடியாமல் போகலாம் என ஜெயலலிதா தெரிவித்தார்.

# மதவாத அரசியல் நடத்தும் பாரதிய ஜனதாவை துரத்துங்கள்



(மார்த்தாண்டம்)

தமிழ்நாட்டில் மத வாத அரசியலுக்கு இடம் கொடுக்காமல் பா.ஜ. கவை துரத்த வேண்டும் என கனிமொழி எம்.பி. பேசினார்.

மார்த்தாண்டத்தில் விளவங்கோடு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஜயதரணியை ஆதரித்து அவர் மேலும் பேசியதாவது -

மார்ஷல் நேசமணிக்கு மணிமண்டபம் அமைக்க தி.மு.க அரசு நடவடிக்கை எடுத்து, இப்போது டெண்டர் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களை ஏமாற்றும் விதத்தில் அ.தி.மு.க பொதுச்செயலர் ஜெயலலிதா மாரஷ்ல் நேசமணிக்கு மணிமண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பேசியுள்ளார். மத்திய அரசு சிறுபான்மை மாணவர்களுக்கு வழங்கி வரும் கல்வி உதவித் தொகையை ஆட்சேபித்து நாடாளுமன்றத்தில் எதுவும் பேசாத பா.ஜ.க, தமிழகத்தில் அதைச் சொல்லி அரசியல் நடத்தி வருகிறது.

இந்த உதவித்தொகைத் திட்டம் அவர்கள் ஆளும் மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே மத ரீதியாக மக்களை பிளவுப்படுத்த பா.ஜ.க இதனைப் பயன்படுத்துகிறது.

எனவே மத ரீதியாக மக்களைப் பிளவுப்படுத்த முனையும் பா.ஜ.கவை தமிழக மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றார் அவர்.

# தலைமுடி விற்பனை மூலம் மேலதிக இலாபம் கிடைப்பு



திருப்பதி தேவஸ்தானம் நிரணயம் செய்த விலையை விட 53 கோடி ரூபாய் அளவிற்கு அதிக விலை விற்கப் பட்டதால், தேவஸதான நிர்வாகத்திற்கு, தலைமுடி விற்பனை மூலம் லாபம் கிடைத்துள்ளது.

திருப்பதி வெங்கடேச பெருமாளைத் தரிசிக்க வரும் லட்சக்கணக்கான பக்தர்கள், தங்களின் பிரார்த்தனையாக முடிக் காணிக்கை செலுத்து கின்றனர். இதன் மூலம் தொன் கணக்கில் தலை முடிகள் சேமிக்கப்படுகின்றன.

திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் சேமிக்கும் தலைமுடிகள் ஒவ்வொரு ஆண்டும் பகிரங்கமாகவும், மின்னஞ்சல் மூலம் ஏலம் விடப்படுகிறது. திருப்பதி தலைமுடிக்கு, சர்வதேச மார்க்கெட்டில் நல்ல வரவேற்புள்ளது.

இதுவரையில் சர்வதேச அளவில் முடிகளை வாங்கும் சில வியாபாரிகள், ஒன்று கூடிப் பேசி (சிண்டிகேட்) குறைந்த விலைக்கு ஏலம் கேட்டு வந்ததால், தேவஸ்தான நிர்வாகத்திற்கு எதிர்பார்த்த அளவிற்கு தலைமுடி விற்பனையில் அதிக விலை கிடைக்கவில்லை. இதனால், ஒப்பந்தக் காரர்களிடம் தனித்தனியாக கேள்வி கோரப் பட்டதால், தலைமுடிகளை வாங்க அதிகளவில் வியாபாரிகள் முன் வந்தனர்.

தற்போது தேவஸ்தான நிர்வாகம், விற்பனைக்காக வைக்கப்பட்ட 115 கோடி ரூபா மதிப்புள்ள தலைமுடிகளில் முதல் ரகம், இரண்டாம் ரகம் என ஐந்து பிரிவுகளாக பிரிக்கப் பட்டன.

இதில், 31 அங்குல நீளம் உள்ள முதல் ரகம், தேவஸ்தானம் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட ஒரு கிலோ 100 ரூபாய் அதிகம் என்ற கணக்கில் 5 டன்களும், இரண்டாம் ரகம் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட 180 ரூபாய் கூடுதலாக வாங்குவதற்கு வியாபாரிகளிடமிருந்து தேவஸ்தான நிர்வாகத்திற்கு கேள்வி கிடைத்துள்ளது.

மின்னஞ்சல் மூலம் விற் பதற்கு, 41 ஆயிரம் கிலோவிற்கு வியாபாரிகளிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தேவஸ் தான அதிகாரி கள் தெரிவித் துள்ளனர். மேலும், 5 அங்குலத்திற்கும் குறைவாக உள்ள தலை முடிகளை வாங்கவும் வியாபாரிகள் விருப்பம் காட்டவில்லை.

தலைமுடிகளை நல்ல விலைக்கு விற்க முயற்சி மேற்கொண்டதன் மூலம் 53 கோடி ரூபாய்க்கு அதிகளவில் தேவஸ்தான நிர்வாகத் திற்கு, வருமானமாக கிடைத்துள்ளதாக தேவஸ் தான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சர்ச்சைக்குரிய காந்தியின் புத்தகம் தடைசெய்யப்படமாட்டாதாம்

## வீரப்ப மொய்லி தெரிவிப்பு

(நாக்பூர்)

மகாத்மா காந்தி குறித்த சர்ச்சைக்குரிய புத்தகத்துக்கு தடை விதிக்கப்படாது என மத்திய சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி தெரிவித்தார்.

அந்தப் புத்தகத்தை எழுதிய அமெரிக்க எழுத்தாளரே மகாத்மாவைப் பற்றி அவதூறான கருத்துகள் எதுவும் எழுதவில்லை என மறுத்துள்ளதாக வீரப்பமொய்லி குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் கடும் விளைவுகளை ஏற்படுத்திய காந்தி தொடர்பான அந்தக் கருத்துகள், மொழிபெயர்ப்பாளர்களால் எழுதப்பட்ட புத்தக விமர்சனம் என மொய்லி தெரிவித்தார்.

புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுபவை தான் எழுதியதல்ல என, அந்த எழுத்தாளரே விளக்கம் அளித்துள்ளதால் அதைத் தடை செய்யும் கேள்விக்கே இடமில்லை என நாக்பூரில் வீரப்பமொய்லி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# அ.தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கோவையில் ஒரே மேடையில் பிரசாரம்

(கோவை)

அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வருகிற 6 ஆம் திகதி கோவையில் பிரசாரம் செய்கிறார்.

அன்று மாலை கோவை வ.உ.சி. மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் பேசுகிறார். இந்தக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்கிறார்கள்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், மார்க்சிஸ்டுட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய செயலாளர் பிரகாஷ்கரத், மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா.பாண்டியன், புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, கொங்கு இளைஞர் பேரவை தலைவர் தனியரசு உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

இது குறித்து கோவை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும் கோவை வடக்குத் தொகுதி வேட்பாளருமான மலரவன் நிருபர்களிடம் கூறியதாவது:-



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மதுரையில் பிரசாரத்தை முடித்து விட்டு இன்று இரவு விமானம் மூலம் கோவை வருகிறார். காளப்பட்டியில் உள்ள பங்களாவில் இரவு தங்குகிறார். நாளை கோவையில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் ஊட்டி செல்கிறார். அங்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசுகிறார்.

பின்னர் அங்கிருந்து ஹெலிகொப்டரில் பொள்ளாச்சி செல்கிறார். பொள்ளாச்சியில் நடைபெறும் பிரசார கூட்டத்தில் மடத்துக்குளம், பொள்ளாச்சி, உடுமலை, வால்பாறை ஆகிய 4 தொகுதி வேட்பாளருக்கு ஆதரவு திரட்டுகிறார்.

பின்னர் கோவை திரும்பும் அவர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெறும் கூட்டணிக் கட்சி தலைவர்கள் பங்கேற்கும் பிரசார பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். அப்போது கோவை தெற்கு, வடக்கு, மேட்டுப் பாளையம், சூலூர், கவுண்டம் பாளையம், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர் ஆகிய 8 தொகுதி வேட்பாளர்களை அறிமுகம் செய்து பேசுகிறார் எனத் தெரிவித்தார்.

# ஸ்பெக்ட்ரம் குற்றப் பத்திரிகையில் முக்கிய விபரங்கள் குறிப்பிடவில்லை

## பாரதிய ஜனதா குற்றச்சாட்டு

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் தாக்கல் செய்யப் பட்ட குற்றப்பத்திரிகையில் முக்கிய விவகாரங்கள் குறிப் பிடப்படவில்லை என பா.ஜ.க தெரிவித்துள்ளது. முக்கியமாக அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்புக் குறித்து தெரிவிககப்படவில்லை என அக்கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

சி.பி.ஐ சிறிதளவு வளைந்து கொடுத்துள்ளதாக நினைக்கிறேன். பிரதமர் குறுக்கிட வில்லை என அவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். குற்றப் பத்திரிகை யாருக்கும் நற்சான்றிதழ் கொடுப்பதாக இருக்க வேண்டும் என நான் நினைக்க வில்லை. குற்றச்செயல்களை அது கையாள வேண்டும் என பா.ஜ.க மூத்த தலைவர் அருண் ஜேட்லி தெரிவித்தார்.

விசாரணை தொடங்கப்பட்டு 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் சி.பி.ஐ செயற பட்டுள்ளது என ஜேட்லி கூறினார்.

கலைஞர் தொலைக்காட்சிக்குப் பணப் பரிவர்த்தனை நடந்திருப்பதற்கு பெரியளவில் ஆதாரம் இருந்தது விசாரணையின்போது வெளிப்பட்டிருந்தும், அந்த விவகாரத்தை குற்றப்பத்திரிகையில் குறிப் பிடாமல் ஒத்திவைத்ததற்கு சரியான காரணம் இல்லை என அவர் தெரிவித்தார்

# கால்பந்தாட்டப் போட்டியில் கலகம் பத்திற்கும் மேற்பட்டவர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

இளவாலையில் இடம்பெற்ற கால்பந்தாட்டப் போட்டியின் போது ஏற்பட்ட கைகலப்பில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். அத்துடன், பொலிஸ் வாகனமொன்றும் தனியார் மினிபஸ்சும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்திய கால்பந்தாட்டப் போட்டி இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையிலேயே கால்பந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதன் போது,விளையாட்டு வீரர்களுக்கும் ஆதரவாளர்களுக்கு மிடையில் கைகலப்பு ஏற்பட்டது. கற்களால் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், தடிகள் மற்றும் பொல்லுகள் சகிதம் இரு பகுதியினரும் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த இளவாலைப் பொலிஸார், மோதலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட போது பொலிஸாரின் வாகனமும் கற்களால் வீசித்தாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களெனக் கருதப்படும் ஐந்து பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# பொது இடங்களில் வாகனநிறுத்தம் பொலிஸார் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சுன்னாகம் நகரப்பகுதியில் போக்குவரத்துக்கள் அதிகமாகவுள்ள பகல் வேளைகளில் வாகனங்களைப் பொது இடங்களில் நிறுத்துபவர்கள் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

வலிதெற்கு பிரதேசசபையின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் சுன்னாகம் பிரதேச சபையின் பொதுநூலக மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போதே, இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

சுன்னாகம் நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் முன்பாக வாகனங்களை நிறுத்தி பொருட்களை ஏற்றி இறக்குவதால் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாதுள்ளதுடன், விபத்துகள் ஏற்படுவதற்கான அபாயங்களும் காணப்படுகின்றன. இதனால் சுன்னாகம் நகரப் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவதைத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.இந்த நிலையில், காலை மற்றும் மாலை வேளைகளிலும் போக்குவரத்துக்கள் குறைந்த வேளையிலும் வர்த்தக நிலையங்களுக்கு வாகனங்களில் பொருட்களை ஏற்றி, இறக்க முடியுமென தெரிவிக்கப்பட்டது. இதனை மீறுபவர்கள் மீது சுன்னாகம் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டது

# மன்னாரில் கடும் வெப்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வெப்பம் அதிகரித்துக் காணப்படுவதால், அங்கு வரட்சியான காலநிலை நிலவுவதாக மன்னார் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களிலும் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களிலும் கடும் வெப்பம் காரணமாக குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் நீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி இரு கிராம மக்களின் நலன் கருதி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் முகமாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் 20 குழாய்க்கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

# எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் மன்னாரில் எண்ணெய் அகழ்வு ஆரம்பம்

(மன்னார்)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் மன்னாரில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கனிய வளங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

முதல் கட்ட எண்ணெய் அகழ்வுப் பணிகள் இந்திய நிறுவனம் ஒன்றின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கனிய வளங்கள் அமைச்சு அறிவித்துள்ளது. ஆரம்ப படிமுறையின் போது மூன்று எண்ணெய்க் கிணறுகள் மட்டுமே தோண்டப்படவுள்ளன.

அதன் பின் மன்னார் எண்ணெய்ப் படுக்கையில் தோண்டியெடுக்கப்படும் எண்ணெய் வளத்தைப் பொறுத்து மேலதிக கிணறுகள் தோண்டுவது குறித்து கவனத்தில் எடுக்கப்படும் என்றும் அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

அத்துடன் இவ்விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமையவே ஒவ்வொரு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# வவுனியா பொது வைத்தியசாலையிலும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைப்பு



(கொழும்பு)

வவுனியா பொது வைத்தியசாலையின் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு வவுனியா மன்னார் வீதியிலுள்ள சாளம்பைக் குளத்தில் அமைக்கப்படவுள்ளது.

தெஹிவளை மெற்றோ லயன்ஸ் கழக மாவட்ட 306ஏ1 கிளை அனுசரணையுடன் வெளிநாட்டிலிருந்து கிடைத்துள்ள சுமார் 140 மில்லியன் ரூபா செலவில் இந்த சிகிச்சை நிலையம் அமைக்கப்படும் என இந்தத் திட்டத்தின் தலைவி திருமதி மாலினி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

லயன்ஸ் ஆளுநர் சுனில் தர்மரட்ன மற்றும் லயன்ஸ் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட ஆரம்ப வைபவம் சாளம்பைக் குளத்தில் கடந்த சனிக்கிழமை காலை சுப நேரத்தில் மண்வெட்டி பிடித்து நிலத்தைக் கொத்தி ஆரம்பித்துவைத்தார்கள்.

அதற்கு முன்னர் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் பாடப்பட்டதுடன் மங்கள விளக்கேற்றலும் இடம்பெற்றது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிவான் சுரேஸ் சந்திரன், முன்னாள் லயன்ஸ் ஆளுநர் அன்வர்டோல், தெஹிவளை மெற்றோலயன்ஸ் தலைவர் எம்.ரி- பாறுக், வவுனியா லயன்ஸ் கழக இணைப்பாளர் எஸ் சிவபாலன், வவுனியா விசேட பொலிஸ் அதிரடிப்படை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம் ஜெயவீர, உள்ளிட்ட பலர் இந்த ஆரம்ப வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்

வட மாகாணத்திற்கு மத்திய நிலையமாக வவுனியா விளங்குவதினால் சாளம்பைக்குளத்தில் ஐந்து ஏக்கரில் இந்த சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிகிச்சை நிலையத்திற்குத் தேவைப்படும் சகல உபகரணங்களையும் லயன்ஸ் கழகம் வழங்கவுள்ளது.

# மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நேரடியாகத் தலையிடவுள்ளது

## அமைச்சர் சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாட்டுக் கம்பனிகள் நாடளாவிய ரீதியில் திட்டமிட்டு மேற்கொள்ளும் மருந்துப் பற்றாக்குறையை நிவிர்த்தி செய்வதற்கு நேரடியாகத் தலையிடவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்தார்.

இந்த மருந்துப் பற்றாக்குறையை நிவிர்த்தி செய்யும் வகையில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு இலகு கடன் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இதன்படி,உள்ளூரில் மருந்துகளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்று அதன் தொழிற்சாலையைக் கடந்த வெள்ளிக்கிழமை,மொறட்டுவையிலுள்ள பொருபன என்ற இடத்தில் 200மில்லியன் ரூபா செலவில் ஆரம்பித்துள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகள் லினா (Lina) என்ற பெயருடன் சந்தைக்கு விடப்படும்.


இங்கு முதற்கட்டமாக கூட்டுக் குளிசைகள் மற்றும் சுவாச நோய்க்குரிய மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்படும். இந்த சுவாச நோய்க்குரிய மருந்து வகைகள உற்பத்தியை மேலும் திறன்விருத்தி செய்வதற்கு ஜனாதிபதி விருது பெற்ற மருத்துவர் அனில் குணதிலக,தனது பங்களிப்பை வழங்கவுள்ளார். அத்துடன் இந்தக்கம்பனி ஆய்வுகளையும் மேற்கொள்ளவுள்ளது.

அரசும்,தனியார் நிறுவனங்களும் மருந்துவகைகளின் இறக்குமதிக்காக வருடாந்தம் 20 பில்லியன் ரூபாவைச் செலவிடுகின்றன. வெளிநாட்டுக்கம்பனிகள், மருந்து வகைகளைத் தேவையான நேரத்திற்குத் தருவதில்லையென்பதுடன் அவர்கள் இறக்குமதி செய்யும் மருந்து வகைகளும் தரமற்றுக் காணப்படுகின்றன. எனவே இந்த நிலையை மாற்றுவதற்கு உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் உள்ளூரில் மருந்து வகைகளைத் தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்கு உள்ளூர் விநியோகஸ்தரிடம் கேள்விகள் கோரப்பட்ட போதிலும் அவர்கள் பத்து தொடக்கம் 12வீதம் வரை கோருகின்றனர். எனினும் கூடுதலான கேள்வி கோருபவருக்கு மருந்து விநியோகத்தை மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

மருந்து வகைகளை,மேற்கு நாடுகளிடமிருந்தும் இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக சீன அபிவிருத்தி வங்கியால் நிதியுதவி



(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக பல அபிவிருத்தித் திட்டங்களை முனனெடுப்பதற்காக 108 கோடியே 55 இலட்சம் அமெரிக்க டொலர்களை சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இதில் 313 கோடியே 70 இலட்சம் ரூபா உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்காகவும் வடபகுதி இளைஞர்களின் மேம்பாட்டுக்காகவும் கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும், மின்சார விநியோக நடவடிக்கைகளுக்காகவும், சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் 50 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னுரிமைத் திட்ட அடிப்படையில் வீதி அபிவிருத்தி அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமே உயர்தர உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெறும் நிதியுதவிகளில் பெரும்பாலானவை வடமாகாண மக்களுக்காகவே செலவிடப்படவுள்ளதாக தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# புதிய செயற்திட்டங்கள் அமுல் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு

## நவீன மயப்படுத்தலுக்கு முன்னுரிமை



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆராய்ந்துள்ளார்.

நேற்று கொழும்பிலுள்ள அமைச்சின் செயலகத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் பிரதியமைச்சர் வீரக்குமார திசாநாயக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம் உள்ளிட்டோருடன் துறைசார்ந்த உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேசிய வடிவமைப்புச் சபை தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் பனை அபிவிருத்திச் சபை உள்ளிட்டவற்றின் செயற்பாட்டறிக்கைகள் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்கள் கருத்து தெரிவிக்கையில், எமது அமைச்சில் முறைகேடுகளோ துஷ்பிரயோகங்களோ ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு துறைசார்ந்த அதிகாரிகளின் கடமையாகும். அதற்கு எல்லோரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியமானது என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, பனை அபிவிருத்திச் சபையின் செயற்திட்டங்களை மென்மேலும் மேம்படுத்துவது தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை அதன் தலைவர் பொதுமுகாமையாளர் உள்ளிட்டோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பு கொழும்பில் அமைந்துள்ள அமைச்சின் செயலகத்தில் அமைச்சரின் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் பனை அபிவிருத்திச் சபையூடாக எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து கொண்டார்.

இதன் போது கொழும்பு பம்பலப்பிட்டியில் பனை அபிவிருத்திச் சபையின் கிளைக் காரியாலயத்தை இயக்குவது தொடர்பாகவும் அங்கு துறைசார்ந்த உற்பத்திகளை விருத்தி செய்வது தொடர்பாக ஆராயப்பட்டதுடன் இக்காரியாலயம் அடுத்த மாதம் முதல் வாரத்திற்குள் திறந்து வைக்க விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் சங்கானை மற்றும் கோண்டாவில் பகுதிகளில் பனங்கட்டி தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பாகவும் பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகம் ஒன்றை கிளிநொச்சியில் திறப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.முக்கியமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கித்துள் சார்ந்த உற்பத்திகள் குறித்து நவீன முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்து யாழ் பல்கலைக்கழகத்தில் பனை சார்ந்த உற்பத்திகளில் நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு மேம்படுத்துவது தொடர்பாகவும் கற்பகம் விற்பனை நிலையங்களிற்கூடாக கித்துள் மற்றும் பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களை நாடளாவிய ரீதியில் விற்பனை செய்வது தொடர்பாகவும் ஏனைய பல விடயங்கள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் திரு.சிவஞானசோதி, அமைச்சின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம் உள்ளிட்டோருடன் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொதுமுகாமையாளர் கே.லோகநாதன், பணிப்பாளர் எஸ். சந்துரு மற்றும் ஆராய்ச்சி உதவி முகாமையாளர் விஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பால்மாவிலை அதிகரிக்குமா? இப்போதைக்கு சாத்தியமில்லை

பால்மா வகைகளின் விலைகளை அதிகரிக்குமாறு பால்மா கம்பனிகள் முன்வைத்த கோரிக்கையை நுகர்வோர் அதிகாரசபை நிராகரித்துள்ளது.

அனைத்து பால்மா கம்பனிகளும் பால்மா வகைகளின் விலையை அதிகரிக்குமாறு கோரியிருந்தன. ஆனால் நாங்கள் அதனை நிராகரித்துள்ளோம். என நுகர்வோர் அதிககாரசபையின் தலைவர் ரூபி மர்சூக் நேற்று தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் பால்மா கம்பனிகளுக்கு நிவாரணமாக வரியொன்றை அமைச்சு நீக்கியதாகவும் அவர் கூறினார். இந்தத்தருணத்தில் மீள்விலை நிர்ணயம் குறித்து நாங்கள் கவனம் செலுத்தவில்லை உலக சந்தையில் விலையில் ஏற்ற இறக்கம் ஏற்படும் போது எதிர்காலத்தில் விலை அதிகரிப்பு குறித்து நாங்கள் கவனம் செலுத்துவோம். என ரூமி மர்சூக் தெரிவித்தார்.

## தீயில் எரிந்தது புடவைக்கடை மஹரகமவில் சம்பவம்

கொழும்பின் புறநகர்ப் பகுதியான மஹரகம - ஹைலெவல் பிரதான வீதியில் உள்ள வர்த்தக கட்டடத் தொகுதியொன்றில் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் புடவை வியாபார நிலையமொன்று முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

தீ ஏற்பட்டதன் பின்னர் மக்கள் வழங்கிய தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த கோட்டே தீயணைப்புப் படையினருடன் இணைந்து பொலிஸார் சில மணி நேரத்திற்குள் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீயினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனினும் வியாபார நிலையம் முழுவதுமாக எரிந்து பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மஹரகம பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்பாடத நிலையில் மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### எரிபொருள்...

110 டொலர் விலைக்கே அரசாங்கம் எரிபொருள் பெரல் ஒன்றை கொள்வனவு செய்துள்ளது. அரசாங்கம் அசாதாரணமான வரிகளை மக்களின் மீது சுமத்தி மக்களிடம் பணம் சுருட்டியுள்ளது.

தொடர்ச்சியாக வரிகள் மூலம் எரிபொருள், கேஸ் என்பவற்றை கொண்டு பணம் சுருட்டியது. குறைந்த இலாபம் கூடிய சேவையே சாதாரணமாக அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும். ஆனால் எரிபொருள் விடயத்தில் அரசாங்கம் கடைபிடிக்கும் கொள்கையை பார்க்கும்போது கறுப்புக் கடை முதலாளி ஒருவரின் கொள்கையை கடைபிடிப்பது தெளிவாகிறது எனத் தெரிவித்தார்.

### ஐ.நா. நிபுணர் குழுவின்...

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கை எதிர்வரும் 13ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் பான் கீ மூனிடம் கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக இப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. "இவ்வறிக்கையை கையளிப்பதற்கும் அது தொடர்பாக ஆலோசிப்பதற்கும் நேரத்தை ஒதுக்கித் தருமாறு நிபுணர்கள் குழு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கேட்டுள்ளது. ஆயினும் லிபியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகளால் அவரது நிகழ்ச்சி நிரல் இறுக்கமாக உள்ளது.இந்த அறிக்கையைப் பெற்ற பின்னர் அடுத்து என்ன செய்வது என பான் கீ மூனே தீர்மானிக்கவுள்ளார். இவ்வறிக்கை குறித்த நடவடிக்கைகளை பான் கீ மூன் ஆரம்பிக்கும் வரை அது இரகசியமாகவே வைக்கப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜெனிவாவில் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம். இவ்வறிக்கை குறித்து பான் கீ மூன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாயினும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். பின்னர் பாதுகாப்புப் பேரவையில் இவ்வறிக்கை மீதான நடவடிக்கை குறித்து விவாதிக்கப்படலாம்.

அதேவேளை, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விவகாரங்கள் குறித்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இம் மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக இச் சந்திப்பில் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.இவ் விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கையளிப்பதற்கான அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கடும் தொனியிலான செய்தியுடன் றொபேர்ட் ஓ பிளேக் கொழும்பு செல்லவுள்ளதாக தெரியவருகின்றது.

## காயமடைந்த படைச்சிப்பாய்களிடம் சாட்சியம் நல்லிணக்க ஆணைக்குழுவின் விடா முயற்சி

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ராகமையில் அமைந்துள்ள ரணவிரு செவன நிலையத்துக்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளதாக ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன. யுத்தத்தின்போது காயமடைந்த இராணுவ வீரர்கள் சிகிச்சை பெறும் ராகமையில் அமைந்துள்ள இந்த ரணவிரு செவன நிலையத்துக்கு செல்லும் நல்லிணக்க ஆணைக்குழு உறுப்பினர்கள் அங்குள்ள இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆணைக்குழு உறுப்பினர்களுடன் அதன் அதிகாரிகளும் இந்த விஜயத்தில் பங்கெடுக்கவுள்ளனர்.கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. கடந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் விசாரணை அமர்வுகளை நடத்திய நல்லிணக்க ஆணைக்குழு தற்போது சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையிலேயே காயமடைந்த இராணுவ வீரர்கள் சிகிச்சை பெறும் ரணவிரு செவன நிலையத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர். இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழு ஏற்கனவே நாட்டின் பல பாகங்களிலும் விசாரணை அமர்வுகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முல்லையில்..

தாகவும் இறுதி யுத்தத்தின் போது தம்மிடமிருந்த ஆவணங்கள் தொலைந்த காரணத்தினால் வங்கிகளிலிருந்து பணத்தை மீளப்பெற முடியாதுள்ளதாகவும் அச் சங்கத்தினர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

முல்லை மாவட்டத்தில் பனை மரங்களை பேணிப் பாதுகாப்பதுடன் மேலும் மரங்களை நடுகை செய்து பனம் பண்ணையை அமைப்பதுடன், ஊடு பயிர்ச்செய்கையை மேற்கொள்வது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளுக்கு ஏற்ப தற்காலிக கட்டட வசதிகளையும் சங்கப் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பனைசார் தொழில்துறையை நவீன தொழில்நுட்ப வசதிகள் என்பவற்றை பெற்றுத்தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பனை அபிவிருத்தி சபையின் ஊடாக பலவற்றுக்கு உடனடியாக தீர்வு காணப்படும் என இக் கலந்துரையாடலின்போது அமைச்சர் உறுதிமொழி வழங்கினார்.கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் மாவட்டத்தின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினதும் அதன் அங்கத்துவச் சங்கங்களினதும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக இருபது இலட்சம் ரூபாவை கடனுதவியாக வழங்கியுள்ளார்.

இக்கடனுதவிக்கான காசோலையை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர் எஸ். வேதவனத்திடம் கையளித்தார்.இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் திரு.சிவஞானசோதி ஆலோசகர் திருமதி ஜெகராசசிங்கம் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொதுமுகாமையாளர் லோகநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### தமிழர்களை...

சூழ்நிலையில் தமிழர்கள் கொழும்புக்கு நாடுகடத்தப்படுவது ஆபத்தானது. இது தொடர்பாக எனது கருத்தை நாடாளுமன்றத்தில் தெரிவிப்பேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

### பொதுநலவாய...

திகதிக்கு முன்னர் கிடைக்குக் கூடியதாக செயலாளர், உயர்கல்வி அமைச்சு, இல.18, வோட்பிளேஸ், கொழும்பு 07. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம்
... நகர சபை, யாழ்ப்பாணம்.

# கூட்டமைப்பினர் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு வருகின்றார்கள்

## ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி குற்றச்சாட்டு



(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தால் வடக்கின் விவசாயிகளுக்கென வழங்கப்பட்ட 500 உழவு இயந்திரங்களில் சிலவற்றை தென் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் தவறானவை என்று வடமாகான ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இந்தியாவால் வழங்கப்பட்ட இவ் 500 உழவு இயந்திரங்களும், அமைச்சரும் வடமாகாணத்திற்கான அபிவிருத்தி தொடர்பான செயலணித் தலைவருமான பசில் ராஜபக்ஷவால் வடக்கின் விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அதன் இறுதிக்கட்டப் பகிர்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கின் பல பகுதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் நிதி உதவிகள், பசளைகள், இலவச விதைகள், மற்றும் ஏனைய உதவிகளின் மூலம் அதிகமான வரண்ட நிலங்கள் காய்கறி உற்பத்தி மற்றும் நெற்செய்கையால் பசுமை அடைந்துள்ளதுடன், அண்மையில் வெளியிடப்பட்ட தகவலின்படி விவசாய உற்பத்தியானது 10 பில்லியனை எட்டியுள்ளதாகவும். நெல் உற்பத்தியானது 45000 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் மனநிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இன்று முதல் எதிர்வரும் 09ஆம் திகதி வரை AAA Movies International கல்விச் சுற்றுலாவினை மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஒழுங்கு செய்துள்ளது.

கிளி/புன்னை நீராவி அ.த.க. பாடசாலை தர்மபுரம், பரந்தன், யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், கொக்கிளாய் கிராம மாணவர்கள், உப்புமாவெளி ஆசிரியர்கள் இச் சுற்றுலாவில் பங்குபற்றுகின்றனர்.

## சாந்தபுரம்...

சுப்பிரமணியம் பிரதேச இராணுவப் பொறுப் பதிகாரி மேஜர் குமாரசிறி ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகி யோர் நேற்று குறித்த கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்டு மக்களின் நிலைமைகளை நேரில் ஆராய்ந்து அவர்களுடன் கலந்துரையாடி குறித்த 18 குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அங்கு சமூகமளித்திருந்த சாந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களுக்கு தங்களுடைய பிரச்சினைகளை தெரியப்படுத்தி குறுகிய காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொண்டு தங்களுக்கு காணிகளை வழங்கியமைக்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

## இலங்கை...

யாற்றியுள்ளதோடு, பல பத்திரிகையாளர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்திய இராணுவத்தால் பல தாக்குதல் சம்பவங்கள் செய்யப்பட்டாலும், குறிப்பிடத்தக்க பன்னிரண்டுவிடயங்களை இந்த நூல் அம்பலப்படுத்தியுள்ளது. வடக்கு மனித உரிமை கழகம் இப் புத்தகத்தை வெளியிட பெரிதும் உதவியதோடு, ஆவணத் தொகுப்புக்கும் உதவியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளை புத்தகமாக்கி அதை இந்தியாவில் வைத்தே வெளியிட்டுள்ளமை பெரும் பரபரப்பைத் தோற்றுவித்துள்ளது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# முன்னாள் புலிகளுக்கு பாடப் புத்தகங்கள்

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் கல்வி கற்பதற்காக பாட புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, பிரதி கல்வி அமைச்சர் விஜித் விஜிதமுனி செய்சா, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சீ.ஆர். டி.சில்வா, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மோசடி வர்த்தகம்; தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

பண்டிகை காலத்தில் நுகர்வோரை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் மோசடிமிக்க வர்த்தகர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த அறிவித்தலை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ வெளியிட் டுள்ளார்.இது தொடர்பாக சுற்றிவளைப்புகளை மேற்கொள்வது குறித்து நுகர்வோர் சேவை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சந்தைகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் தருணத்தில், அவதானமாகச் செயற்படுமாறும் அமைச்சர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 50 ஆண்டு பழமையான கிணறு கண்டுபிடிப்பு

கிழக்கு மாகாணத்தின் ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து ஐநூறு வருடங்கள் பழைமையான கிணறொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈச்சிலம்பற்று அம்மன் கோயிலை அண்டியுள்ள பிரதேசத்தில் இருந்தே பிரஸ்தாப பழைமை வாய்ந்த கிணறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அக்கிணறு தோண்டப்பட்டிருக்கலாம் அல்லது பயன்பாட்டில் இருந்திருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தொல்பொருளியல் திணைக்களம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. மலசல கூடத்துக்கான குழியொன்றைத் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பிரதேசவாசியொருவரே பிரஸ்தாப கிணற்றைக் கண்டுபிடித்துள்ளார்.

## பொதியில்..

உணவு தொடர்பான ஆலோசனை குழு, உணவு மற்றும் பொதியிடப்பட்ட உணவுகள் குறித்த பணிப்புரைகளை விடுத்துள்ள நிலையில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் ஜுலை 1 ஆம் திகதி தொடக்கம் மனித பாவனைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பொதியிடப்பட்ட உணவு வகைகள் தடை செய்யப்படவுள்ளது.

அன்றைய தினத்திலிருந்து உணவுப்பொருட்களும், உலர் உணவுப் பொதிகள் என்பனவற்றை பொதியிடல், நிபந்தனைகளுக்கு புறம்பாக இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், எடுத்துச் செல்லல், விற்பனைக்காக காட்சிப்படுத்த தடை செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாடு திரும்பிய வீரர்களுக்கு விருந்து வழங்கினார் ஜனாதிபதி

(கொழும்பு)



ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரில் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு நேற்று மாலை அலரிமாளிகையில் விருந்துபசாரம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இரண்டா வது இடத்தைப் பிடித்த இலங்கை அணி வீரர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் சந்தித்தார். உலகக் கிண்ண தொடரில் இரண்டாம் இடத்தைப் பிடித்த இலங்கை அணி வீரர்கள் நேற்றுக் காலை தாய் நாட்டை வந்தடைந்ததோடு, அவர்களுக்கு கிரிக்கெட் ரசிகர்கள் பாரிய வரவேற்பளித்ததுடன் கௌரவத்தையும் வழங்கினர்.

# றிசானாவுக்கு விடுதலை கிடைக்க மனித உரிமை அமைப்பு கரிசனை

(கொழும்பு)

சவூதிஅரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் இலங்கையைச் சேர்ந்த றிஸானா நபீக்கிற்கு உலகம் முழுவதிலும் இருந்து வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதிலும், சவூதி அரேபிய அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர் என்று ஆசிய மனித உரிமை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றபோது நியாயமான விசாரணைக்குரிய உரிமைகள் அவர்களுக்கு இருக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்த்துள்ள ஒரு முக்கிய விடயமாக இது அமைந்துள்ளது என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உண்மையான வயதில் மாற்றம் செய்து சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்ட றிசானாகைக் குழந்தையை கொன்றுள்ளதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குழந்தைக்கு புட்டிப் பால் ஊட்டும்போதே குழந்தை மூச்சுத் திணறி இறந்துள்ளதாக றிசானா தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இவருக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கு எதிராக நீதிமன்றத்தில் மேன்முறை யீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவுகளை மனித உரி மைக் குழுக்கள் பொறுப்பேற்றுள்ளன. எனினும், றிசானாவை விடுதலை செய்வதற்கு இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. றிசானா நபீக்கின் விடுதலை குறித்து அனைத்து தரப்பினரும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பொத்துவிலில் வைத்தியர் கூரை மீது ஏறிப் போராட்டம்

பொத்துவில் மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் வைத்தியசாலையின் மூன்று மாடிக் கட்டட கூரைத்தகடு மீது ஏறிப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவு உள்ள போதும், அச்சத்திரசிகிச்சைப் பிரிவு இயங்குவதில்லை. அது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கக் கோரி அதிகாரிகளிடம் முறையிட்டபோதும் பயனளிக்கவில்லை என்று கூறியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரச்சினைக்கு சரியான தீர்வொன்றினை முன் வைக்குமாறு 32 வயதான வைத்தியர். ஆர்.எம்.சுதந்த ஜயசாந்த என்பவரே இவ்வாறானதொரு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

# விமான நிலையம் விஸ்தரிப்பு கட்டுநாயக்காவில் காணிபறிமுதல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் இரட்டை ஓடுபாதைகள் கொண்டதாக விரிவுபடுத்தப்படுவதற்கென அதனையண்டிய நூறு ஹெக்டயர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையம் கடைசியாக 1986ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பின் விமானநிலையத்தைச் சுற்றி லும் வெற்றுக்காணிகள் இன்மை காரணமாக பல தடவைகள் முன்னெடுக்கப்பட்ட விரிவாக்கல் நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன.

தற்போதைய நிலையில் கட்டுநாயக்க விமானத்தளத்தில் ஒரேயொரு ஓடுபாதை மட்டுமே இருந்தாலும், அதனைப் பயன்படுத்தி மணித்தியாலமொன்றுக்கு சுமார் இருபத்தி ஐந்து விமானப் பறப்புக்களை மேற்கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது.

கட்டுநாயக்கா விமானநிலையத்துக்கு மேலதிகமாக தற்போது அரசாங்கம் அம்பாந்தோட்டையின் மத்தள பிரதேசத்திலும் சர்வதேச விமான நிலையமொன்றை நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளதுடன் அதன் ஓடுபாதை 4000 மீற்றர் நீளமும், 75 மீற்றர் அகலம் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுவருகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.